57

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4.] 1931 ௵ மார்ச்சு ௴ 19 ௳ [No. 11.

30 JUL 1931

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 201
2. பிஸாரோ நாடகம் - (அங்கம்-2 களம்-1, 2) R. B. Sheridan 203
3. யாப்பிலக்கணம்—(வெண்டளை) 206
4. சூளாமணி (உரையுடன்) குமாரகாலச் சருக்கம் (25—32) 209
5. அப்பர் (64-கலை-திருஷ்டிஸ்தம்பனம் வசீகரணம்) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 211
6. மானத சாத்திரம் (மூக்கு-வாய்.) T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 213
7. கம்ப ராமாயணம் (கைகேசி சூழ்வினைப் படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L. 215
8. வர்த்தமானம் 219

கலாநிலயம்

188909

வாழ்வாங்கு வாழ்பவர். 9.

வாழ்க்கையை, மெய்வாழ்க்கை பொய்வாழ்க்கை என இருவகையாகப் பிரித்துரைப்பது வழக்கம். இப்பிரிவினிற்குரிய இலக்கணங்கள் பல்வேறு வகைகளில் உரைக்கப்படுகின்றன வெனினும் கடவுளின் அருள்பயின்ற வாழ்க்கை யொன்றே மெய்வாழ்க்கை என்பதற் கேற்றதென்றும் அவ்வருள் இல்லாது வேறெல்லாம் இருந்தாலும் அவ்வாழ்க்கை பொய்ம்மையே உடையதென்றும் நா மொருவகையில் பாகுபாடு செய்துகாட்டினோம். ஆனால் கடவுள் நம்பிக்கையேனும் அக்கடவு ளருளிற்குத் தாம் இலக்காக வேண்டும் என்னும் விருப்பமேனும் இல்லாத கருத்தினோர் எத்தனையோ பலர் எங்கும் இருக்கின்றனர். அன்னவர் அறிவு எத்துணைக் கூரியதாயிருந்தாலும்; அருளின் பெருமையின்றி ஆராய்ச்சியின் ஆற்றலே கொண்டு விவகரிக்கும் அவர் மதிக்கு எல்லாம் விபரீதமாய்த் தோன்றும். உலகத்தைத்தாம் உட்கொள்ளும் திறமை யின்றி அவர் வழிதெரியாது திரிந்தலைவதால் திகைக்கின்றனர். அருளெனும் தண்ணீரால் நனையாத அவர் நெஞ்சில், எல்லாப் பொருள்களும்—மெய்ப்பொருள் உள்பட—அடைத்துக் கொள்கின்றன. இதனால் விழிபிதுங்க விக்கிவிக்கிப் பிதற்றுவாரவர். அவர் முதுக்குறைந்த அறிவுரைகள் சில அறைவதாக்க் கருதிக் கொள்கின்றனர்.

அன்னவர்தம் இனத்தைச் சேர்ந்தவர் ஒருவர், ஸம்யுவல். டி. ஷாமல்ஹௌஸென் (Samuel D. Schmalhausen) என்பவர். இவர் அமெரிக்கா தேயத்தவர். இவர், "நாம் ஒழுக்கம் பிறழ்வதேன்" என்ற தலைப்புடைய புத்தகம் ஒன்று வரைந்து இரண்டு ஆண்டுகளுக்குமுன் வெளியிட்டிருக்கின்றார். அப்புத்தகத்தின்கண் கீழ்க்காணும் வாக்கியம் தென்படுகின்றது.மெய்ம்மையை அவர்மதித்திருக்குந் தன்மையிலிருந்து பொய்வாழ்க்கையின் பேய்க்குணம் நன்கு புலப்படுமாகையால் அதனை இங்கு எடுத்து எழுதுகின்றோம்:—

Men pursue truth, and to what high purpose? Are they lovers of enlightenment? Does truth bring them inspiration? Is the truth so generously praised because it is the great liberator? Perhaps. What is superabundantly clear is the cunning use to which truth is put by competitive and scheming men who are forever and forever in search of highfalutin justification of their petty and ignoble intentions. Truth is a

3L
M211, N28 K N
N31'4.11

weapon in the struggle for power profit and prestige. Truth is that abuse of knowledge by which since the dawn of critical thinking men have elevated their status in the world. Truth as illusion is worshipped by man. Truth as disillusion is despised. Why, you may ask, do men even pretend to love truth when their lives are so transparently a lie? Men pretend to love truth because it adds to their prestige, among pretenders, to do so. If you have any doubt about the infinite dishonesty of the human mind, its hatred of the truth, simply recall the painful and never ending conflict between the great disillusioned skeptics and the small illusioned credulous folk......Who loves the truth? We love the power and the prestige and the glory that truth in due time confers upon those who manipulate its pretences for purposes of self-glorification and ego-fulfillment. Men do not love truth. They are too inferior for that consecration. What they urgently need and desire is the bolstering up of their inadequate human nature which truth is able to provide in the mean struggle of liars for competitive and exclusive advantages. Truth is a subtle weapon inferior men use in their crooked attempts to cancel out the consciousness of inferiority."

இவ்வாங்கில வாக்கியங்களைச்சிறிது பின்னர்ஆராய்ந்துபார்ப்போம். இந்நூலாசிரியர் தன்னைச் சூழ்ந்திருக்கும் 'அமரிக்க' வாழ்க்கையினின்று திரண்டெழுந்த அநுபவத்திலிருந்து இவைகளை எழுதினார். அவ்வாழ்க்கை எத்தகையது என்பதையும் அவர் உரைத்தபடியே முதலில் தேர்ந்துகொள்வது நல மாதலின் அதனையும் இதன் கீழ் வரைந்த பிறகு இக்கருத்துக்களை ஆராய்வோம்:—

If we humbly acknowledge that our civilization is merely a complicated form of savagery, at best simply the higher barbarism, brutishness wearing an attractive mask of refinement, we shall appreciate the truth that if civilization means, anything really worth while, it must reveal a high degree of humanization. Humanizationis attestedby the general presence in human relations of compassion. Compassion is something nobler than pity or charitable amiability: It is social sympathy illumined by a fairly impersonal sense of justice. You may get a rough estimate of the vileness of a society by noting its major injustices. Our dirty civilation is nurtured by violence, hate, envy, inequality injustice, legal thuggery, moralistic humbuggery, religious hypocrisy personal rapacious egotism, a truly troglodyfe contempt for what is sensitive and sincere in human nature. This so-called civilization which is a pigsty made somewhat habitable by an inordinate use of perfume, lives by callousness and cruelty. The perfumed perfidy of superior brains under this regime of sanctified savagery is the one conspicuous fact whith wich as sensitive critics of civilization we ought to reckon. Wrong-doing, rationalised into plausible propositions by leglistic and moralistic cunning, fills every nook and cranny of our exploitative civilization."

பத்திரிகைகளின் செல்வாக்கினாலும், குடியரசாட்சி முறைகளினாலும், பரவிய கல்வியாலும், மாதர் விடுதலையினாலும், கைத்தொழில் வர்த்தகங்களின் பெருக்கத்தினாலும் முன்னேற்றமடைந்ததென இங்கிருந்து சிலமாக்களால் கொண்டாடித் தொழுகின்ற மேல்நாட்டு வாழ்க்கை இவ்வகைத்தெனும் உண்மையையும் அதன் காரணத்தையும் வற்புறுத்திக்காட்டுதற்கு இவ்வாக்கியங்களை எடுத்தெழுதினோம். வாழ்வாங்கு வாழ்பவர் அவர்களல்லர். அவர்கள் வாழ்க்கைக்கு நாம் அங்காந்திருக்க வேண்டா. அவர் கையாளும் முறைகளொன்றிலேனும் அருளுக்கிடமில்லையாதலால் அக்கதி அவர்களுக்கு வந்தெய்தியது. ஆதலின், அவ்வாழ்க்கை வேண்டுவோரன்றி ஏனையோர் அந்த முறைகளையும் வேண்டமாட்டார்-இதுவோ மனிதர் வாழ்க்கையி னியற்கை!

இவ்வாண்டில் புதிய சந்தாநண்பர்களாய்ச் சேர்ந்திருப்பவர்க்கு 1930-வது ஆண்டு இதழ்கள் வேண்டுமாயின் உடனே வரைதல் நலம். ஆப்லெதர் பைண்ட செய்து தபால் [illegible] விலை ரூ. 10. வரைந்து பணத்தையும் அனுப்பிவைக் [illegible] மானேஜர்

பி ஸா ரோ

(Copy-right with Messrs. C. Coomaraswamy Naidu & Sons.)

ரிச்சர்ட் பிரின்ஸ்லே ஷெரிடன் எழுதிய வோர் ஆங்கில நாடகத்தின் மொழிபெயர்ப்பு

[184-வது பக்கத் தொடர்ச்சி]

இரண்டாம் அங்கம்

முதற் களம்

இடம்:—கற்பாறைகளின் நடுவிற் செடிகொடி ளடர்ந்தவோர் ஆற்றங்கரை.

[கோரா தன் குழந்தையுடன் விளையாடிக்கொண்டிருக்க அலான்ஸோ மனக்களிப்புடன் அவளைச் சுற்றி உலாவிக்கொண்டிருக்கின்றான்.]

கோரா:—*இதோ, இப்பொழுது பாருங்கள். உங்கள் படிவம் அப்படியே இருக்கின்றதோ வில்லையோ?*

அலான்ஸோ:—*இல்லை. உன் படிவந்தான் அதிகம் —உனது மெல்லியமேனியும், உன் நகுகின்ற திருமுகமும்...*

கோரா:—*ஆனால் காகச்சிறகெனப் பறக்கு மிவன் குஞ்சியும் கண்களி னிறமுமோ—பிராணநாயக! அட! என் னருமை நாதனது திருவுருவமே! அட! எனது செல்வச் சிறு மகவே!*

(குழந்தையை மார்போ டணைத்துக்கொள்கின்றாள்.)

அலான்ஸோ:—*நீ எனக்குக் காட்டிவந்த ஆசையிற் பாதிஇந்தக் கள்ளச் சிறுகண்மணி கவர்ந்துகொண்டானெனத் தோற்றுகின்றது, கோரா. இம்மதலை உதிப்பதற்கு முன்னரெல்லாம் எனக்கே கிடைத்திருந்த உன் முத்தங்களிற் சிலவாகிலும் செலவாகி விடுகின்றன இவனுக்கன்றோ இப்பொழுது.*

கோரா:—*இல்லை. அப்படி யன்று, என் தலைவ! ஒரு அன்னை தனதினிய குழந்தைக்குக் காட்டும் ஆசை,தன் அருமைக் கணவனுக்கென்று வைத்திருக்கும் களஞ்சியத்தினின்று திருடினாற்றான் உண்டோ? தனது பேரின்பத்தைப் பெருக்கிய அக்கடவுளுக்கு விரைந்துசெலுத்தும் நன்றியின் புதிய இன்பமன்றோ விது!*

அலான்ஸோ:—*என்ன! கோரா! நான் கூர்ந்தகுறை உண்மையென்றோ எண்ணிக்கொண்டனை?*

கோரா:—*என் கண்மணி விரைவில் இனி மழலைகள் மிழற்றத் துவக்குவான். அப்பொழுதே, அருட்பெருங் கடவுள் அன்புள்ள அன்னைக்கு அளித்திருக்கும் மூன்று உற்சவநாட்களில் கடைசிநாள் கொண்டாடுவேன்.*

அலான்ஸோ:—*அம்மூன்று மெவையோ?*

கோரா:—*பிறந்தவுடன் பெருகியெழும் பேருவகையை யான் ஒன்றாக மதிப்பதில்லை. அது சுயநயத்தாலுண்டானதென்றும் சொல்லலாம். செந்தாமரை முகையனைய ஈரினின்று முத்தனைய பற்கள் தோன்று நாளே முதல்நாள் உற்சவம். அடுத்தது, தந்தையின் கொஞ்சுங் கரங்களினின்றும் கழன்று தள்ளாடித் தள்ளாடி வந்து தன் தாயின் கால்களைக் கட்டித் தழுவிச் சிரித்து மகிழ்கின்றானே; அந்நாளே இரண்டாம் நாள். மூன்றாம்நாள் இதனினும் இனியது. முதல்முதல் நாத்தடுமாறக் குதலைமொழி கூட்டி நம் காதுகுளிர 'அப்பா' 'அம்மா' வென்று அழைக்கின்றானே! ஆகா! அதனினும் ஈன்றோர் செவிகளுக்கு ஊதியம் வேறென்ன வேண்டும்!*

அலான்ஸோ:—*நிறைகாதற் பெருநிதியே, கோரா!*

கோரா:—*ஓ! எனது நாத! நாள்தோறும் நிமிடந்தோறும், நான் இப்பாலகனையு முங்களையும் பெற்ற பாக்கியத்திற்காகத் தெய்வத்தைத் துதித்துவருகின்றேன்.*

அலான்ஸோ:—*தெய்வத்தையும், ரோலாவையும்!*

கோரா:—*ஆம், தெய்வத்தையும், ரோலாவையும். நீங்களும் அவர்களை நன்றியுடன் நினைக்கவில்லையா, நாதா! என்ன! வேறுபாடொன்று உடையராய்த் தோன்றுகின்றீர்?*

அலான்ஸோ:—*கோராவும் இக் கேள்வி கேட்பாளோ?*

கோரா:—*மற்று, நீங்கள் ஏன் சிலநாட்களாய் நித்திரையின்றிப் படுக்கையிற் புரள்கின்றீர். ஏன்? கண்ணயராமற் காத்திருக்கும் எனது காதிற்கு, நீங்கள் அடக்கமாட்டாமற் போக்கும் நெட்டுயிர்ப்புக்களை நள்ளிரவு காட்டிக்கொடுத்துவிடுகின்றது.*

அலான்ஸோ:—*எனது சுதேச சகோதரர்களுக்கு விரோதமாய் நானின்று போர்செய்யவேண்டி யிருக்கவில்லையா?*

கோரா:—*அவர்கள் நமது நாசத்தைத் தேடிவரவில்லையோ! பார்க்குங்கால் மனிதர்களெல்லாம் சகோதரர்கள் தானே.*

அலான்ஸோ:—*வெற்றியும் அவர்களே பெற்றுவிட்டாலோ?*

கோரா:—*நான் பறந்துவந்து உங்களை மலைமேற் சேர்ந்துகொள்வேன்.*

அலான்ஸோ:—*பறப்பாயா! பாலகனை ஏந்தினளாய் நீ பறப்பதெப்படி, கோரா?*

கோரா:—*என்ன! உயிர்காக்க ஓடுங்கால், ஒரு தாய்க்குத் தன் குழந்தையின் பாரமும் தெரியுமோ?*

அலான்ஸோ:—*கோரா, இனியாய்; என் மனம் அமைதியா யிருக்கவேண்டு மென்னுமெண்ண முனக்கில்லையா?*

கோரா:—*ஆம், ஆம், ஓ ஆம்!*

அலான்ஸோ:—*பெருகிய கன்னியர் மனைவியர் பாலகர் எல்லாரும் போரின்முடிவு தெரியுமளவு மலைகளுக்குநடுவில் ஒளிந்திருக்கும் புகலிடத்திற்கு நீயும் விரைந்துசெல். கோராமாத்திரம், தன் கணவன்*

தனது உறவினர் அரசன் முதலியோர் விருப்பிற்கு மாருக நிற்பானேன் ?

கோரா:—எனது ஆருயிர் நாயகா, நானுங்களை விட்டெப்படிப் பிரிந்திருப்பேன் ? உங்களுக் கருகிலில்லா ஒவ்வொரு நிமிடமும், நீங்கள், புண்பட்டும் தனியாயும் வஞ்சனைக்காளாகியும்—ஐயோ என்னென்னவோ எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி உருகுவேனே; ஐயையோ ! நானுங்களை விடமாட்டேன்.

அலான்ஸோ:—ஏன் ! ரோலா இருப்பான் என்னுடன்.

கோரா:—உண்மையே; ஆயினும் என்! போர்முழக்கத்திற் படைகளடர்ந்த விடத்தில் ரோலாவைப் பார்க்கலாம். பின் பழிதீர்க்க வரலாமேயன்றி யுங்களைக்காப்பாற்ற முடியுமோ, அவரால்? கொலைதொடர்ந்து செல்கையில் உங்களை அவர் மறப்பினு மறக்கலாம். இவைகளெல்லா மிருக்கட்டும். உயிரிழந்தாலன்றி நானுங்களை அரைக்கணமும் விட்டுப் பிரிவதில்லையென்று சத்தியஞ்செய்துளேனே— நான் சத்தியம் பிறழ்வது முங்களுக்குச் சம்மதமோ ?

அலான்ஸோ:—அழகிலும் ஆற்றலிலும் அமைதியிலும் வாய்மையிலும் இணையில்லா எனதுயிரே, எனது அன்பே; யாவும் நீயே எனக்கு. ஆகா! காதல் மனையாளைக் கடந்துசென்று பொன்னுடொன்று தேடப்புகும் மதியிலிகளும் இவ்வுலகில் இருக்கின்ருர்களே!

கோரா:—என்னிறைவ ! உங்களுக்குத் தக்க வந்தனம் அளிப்பதெப்படியென்று தெரியாமல் திகைத்து நிற்கிறேன். மௌனமே அந்தரங்கக் காதலின் அறிகுறி. அதை ஒலியால் உரைக்கமுயல்வோர் முறை தப்பிவிட்டவ ராவர். (உள்ளே இரைச்சல்) நமதரசர் வருகின்றனரோ ?

அலான்ஸோ:—இல்லை. பலியிடும்போது கோவிலைச் சுற்றிக் காவற்சேவகர்களை நம்முடைய சேனைத்தலைவன் நிறுத்துவது. இதோ வெற்றியின் முடிவைத்த வீரமணி ரோலா வருகின்ருன்.

ரோலா:— (உள்ளே) ஆயின் நமது சேனையைக் குன்றின்மேல் பகைவரைநோக்கி அணிவகுத்து நிறுத்திவை.

[ரோலா வருகின்ருன்]

கோரா:—ரோலா, என் நண்ப, எனது சகோதர !

அலான்ஸோ:—ரோலா ! என் நண்ப, எனது வள்ளலே! நீ எங்களிருவருக்கும் செய்ததற்கொரு கைம்மாறு இவ் வாழ்நாட்களுக்குள் எப்படிப் புரியவல்லோம்.

ரோலா:—உங்கள் நாட்களை மகிழ்சிறக்க அமர்ந்து வாழ்வதை ரோலா கண்ணுரக் காணட்டும். வேறு என்ன வேண்டும் !

கோரா:—இதோ இந்தக் குழந்தையைப் பார்— எனது உயிரே இவன்—ஆனல், தந்தையினு முன்னை இவன் சிறிது குறைய மதித்தாலும்— உன்னிடத்துக் குறைந்த அன்பு வைத்தாலும்—இதோ பார், அன்னை என் சாபம் அவன் தலைமேலேயே—

ரோலா:—ஓ ! போதும் போதும். இந் நன்றிக்கு உரியனுக யான் செயற்கருங் காரியம் யாது செய்துவிட்டேன் ? என் காதல்காடியது கோராவின் பாக்கியத்தையே. இதோ ! கோரா மிக்க இன்பமுற்று இருக்கின்ருள். என தெண்ணம் நிறைவேறிவிடவில்லையா ? விலைமுதலோடு எனக்குத் தக்க இலாபமும் கிடைத்துவிட வில்லையா ? கோரா, நண்பனெருவன் சொல்லும் வார்த்தையைக் கேள். நீ போய்விடவேண்டும்; நம் மாதரும் மக்களும் முதியோரும் ஒளிந்திருக்கும் மலைக்குகைக்குச் சென்று நீ காக்கப்பெற்றிரு, போ.

கோரா:—நீயும் என் நாதரும் இருக்குமிடத்தை விடவா வேருேர் காவல் எனக்குளது, ரோலா ?

ரோலா:—பிஸாரோ நம்மீது கதுமென மோதிப்பாய முயலும்சூழ்ச்சி தெரியவருகின்றது. கோரா, நீ உடன் இருப்பதால் எங்களுக்கு உபயோகமொன்றுமில்லாமற் போவதுமன்றி, இடையூறுகவும் விளையும்.

கோரா:—இடையூறுகவா ?

ரோலா:—ஆமாம். நாங்கள்—உன் கணவனும், உன் நண்பனும்—உன்மீது வைத்திருக்கும் அன்பு இவ்வளவென்று அறிவாய். நீ எங்களருகில் இருப்பாயாயின் எங்கள் நினைவு ஆற்றல் ஒன்றுமே எங்களுடைய தல்ல. முற்பழி எங்கிருந்து தீர்ப்ப தப்போது ? ஆயிரம்வருவதா யிருந்தாலும் நீ யிருக்குமிடத்தைவிட்டு அடியெடுத்து வைப்போமோ ! உன்னைக் காக்கவன்றி ஆபத்திலுள்ள அயலோனுக்குதவிபுரியவும் விரைவோமோ? உண்மைக் காதலனுக்குத் தன் கண்ணனைய மனையாள் இடுக்கணிற்கு இலக்காகாமல் இருக்கின்ருளென்பது நிச்சயமாய்த் தெரிந்தாலன்றிப் போர்முகத்தில் அவன் உடல் நெகிழ்ந்துநிற்பதே யல்லாமல் கதுவிய வாளொடு கைகள்தாம் ஓங்குவ தெங்ஙனம்!

அலான்ஸோ:—வந்தனம், எனது நண்ப! இவைகளையே அவளுக்கு நான் எடுத்துரைக்க முயன்றிருந்தேன்.

கோரா:—இவ்வகை, பராக்கிரமமன்றிப் பயத்தையுண்டாக்குவதெல்லாம்காமவெறி மேற்கொண்டவோர் கோழைத்தனம். இதனுல் எனக்கு முகமன்கூறிய தாகுமே யன்றி என்னை மகிழ்வித்த தாகாது. மனைவி ஒருத்தியும் நம்பா ளிதனை.

ரோலா:—குழந்தையைப் பெற்றவோர் அன்னை. தானும் செவிகொடாளோ இதற்கு?

கோரா:—(குழந்தைக்கு முத்தம்கொடுக்கின்ருள்) இது போதும்! என்னை என்னவேண்டுமெனினுஞ் செய்துகொள்ளுங்கள். எனது நண்ப, எனது கணவ ! சொன்னவிடம் மறக்காமல் இனிச் சென்றுறைய இசைகின்றேன்.

அலான்ஸோ:—என்கண்ணே, இதற்கு மிக்க வந்தனம். (உள்ளே ஆரவாரம்)—அரசன் கோயிலுக்குப் போகின்ருன். என்ன, ரோலா, பதுங்கியுள நம் பகைவர் கடிதெழுந்து அடர்க்கவருவாரென்று இயம்பினுய். என தாட்களுள் ஒருவனைக் காணவில்லையாம். எதிர்த்தோ வஞ்சித்தோ அவனைக் கைப்பற்றிக்கொண்டனர்; யானறியேன்.

ரோலா:—எப்படியானு லென்ன. நாம் எதனையுந்தான் எதிர்நோக்கி யிருக்கின்ருேமே. வா, கோரா, நமது வெற்றியின்பொருட்டு நீ கடவுளுக்குப் பூசனை புரிந்திடு. உடல்நடுங்கும் மனைவியும், அன்பு நிறைந்த அன்னையும், பக்தியுடன் அனுப்பும் பிரார்த்தனையே, அடியார்க் கருள்புரியும் இரக்கமுடைய நம் கடவுளின் சிம்மாதனத்தை விரைவில் எட்டுகின்றது. (போகிருர்கள்)

இரண்டாம் களம்

இடம்:—சூரியபகவான் கோயில். குருமாரும், கன்னிகைகளும் இருக்கின்ருர். அத்தாலிபாவும் அவன் படைத்தலைவர்களும் ஒருவழியாய் வருகின்ருர். மற்ருெரு வழியாய் ரோலாவும் அலான்ஸோவும், கையிற் குழந்தையுடன் கோராவும், வருகின்றனர்.

அத்தாலிபா:— அலான்ஸோ, (ரோலாவைப் பார்த்து) உறவினரே, வருக. (கோராவைப் பார்த்து) இந்த அழகிய மகவினைப்பெற்ற உனது பாக்கியமே பாக்கியம்.

கோரா:—குடிகளைக் குழந்தைபோற் காத்தருளும் எங்க ளிறைவனுக்குப் பரிதிக்கடவுள் எந்நாளும் கொற்றமே கொடுப்பார்.

அத்தாலிபா:—'குடியுயரக் கோல் உயரும்'.......... நண்பர்காள், நமது போர்வீரர்கள் எந்நோக்கங்கொண்டுளர்?

ரோலா:—தாங்கள் மேற்கொண்டிருக்கும் செய்கையின் தன்மைக்கு எவ்விதத்திலும் குறைந்ததன்று. சயம் அல்லது சாவு; நமது அரசன்; நமது தேசம்; நமது தெய்வம், என்று ஆரவாரம் செய்யாநின்றனர்.

அத்தாலிபா:—ரோலா, நீ விபத்துற்ற வேளையில் வெற்றிக்கொடி தாங்கிப் போர்முகம் செல்லுமுன், நமதுசேவகர்களின் வீரத்தைச் சிறிதுதூண்டுவ துண்டல்லவா ?

ரோலா:—ஆம், ஆயினும்—இப்படிப்பட்டவிபத்து இவ்வளவு நெருங்கியிருக்க — வார்த்தைகளாலா தூண்டவேண்டும் இவர்கள் வீரத்தை இப்பொழுது! எனது தீர சிங்கங்காள்—எனது இடுக்கண்களையும், எனது கீர்த்தியையும் உடன்நின்று அனுபவிக்கும் நண்பர்காள் !—உங்கள் இருதயத்தினின்று எழும் வெஞ்சினத்தை விடவா, ரோலாவின் வார்த்தைகள் ஆற்றல் இன்று உங்களுக்கு அளிக்க வரவேண்டும். இல்லை. இக் கடற்கொள்ளைக்காரர் நம் செல்வத்தைக் கைப்பற்றிக் கொள்வதுமன்றி, நம்மை மயக்கிவைக்கப் பயிலும் அப்பாதகர்களின் வஞ்சனைமொழிகளின் கடையாய தன்மையும், என்னளவு, நீவிரும் அறிவீர். அவர்களை இந்தப் போரிற்குத் தூண்டும் இழிநோக்கத்தின் தன்மையையும், நம்மை இதே போர்க்குத் தூண்டும் தூயநோக்கத்தின் தன்மையையும்,என்னைப் போலவே, நீங்களும் சீர்த்தூக்கிப் பார்த்திருக்கின்றீர். அவர்தாம் அகங்காரம் மேலிட்டு, அதிகாரத்திற்காகவும், கொள்ளைக்காகவும், அரசிற்காகவும், படையெடுத்துவந்திருக்கின்ருர். நாமோ, நமது நாட்டிற்காகவும், தேவாலயங்களுக்காகவும், நமதுமனைவிமக்களுக்காகவும் சண்டைசெய்ய நேரிடுகின்றது. அச் சைனியம், ஓர் கள்வர்தலைவனைப் பின்பற்றிச் செல்வதற்குக் காரணம் பயமே. தங்களைக் கீழ்ப்படுத்தி வைத்திருக்கும் அப்பிஸாரோவின் வலிமையை வெறுக்கின்றனர். நாமோ, அன்புமேலிட்டு அரசனுக்கும், பக்திமேலிட்டுக் கடவுளுக்கும் சேவகம் செய்கின்ருேம். அவர்கள் கோபத்தில் நாசமும் சாந்தத்தில் துக்கமும் அடைகின்ருர். என்னவோ, நம்முடைய அரசியலைச் சீர்திருத்தி, நமது எண்ணங்களை மேம்படுத்தி, நம்மைப் பிழையினின்று விடுவிக்கத்தான் தாங்கள் வந்திருப்பதாக வம்பு பேசிக்கொள்கின்றனர். ஆம். காமக் குரோதாதிகளில் பந்தப்பட்டுழலும் இக்கீழ்மக்களாலா நமக்கு ஞானேதயம்உண்டாகப்போகின்றது? நம்மைக் காப்பாற்ற வருகின்ருேம் என்கின்றனர் : ஆம், ஆட்டுக்குட்டிக்குக் கழுகு அளிக்கும் அபயம் தான் அது-வட்டமிட்டுவட்டமிட்டு விழுங்கிவிடுவது. பண்டைநாள்முதல் நாம் அன்புடன் ஆதரித்துவரும் குலாசார தேசாசாரங்களைக் கைசோரவிட்டு, இவ்வன்னியர் காட்டும் நூதன அனுசரணைகளையும், அதனுடன் அன்னியமதக் கடவுளையும், நாம் கொண்டாடவேண்டுமென்றுவற்புறுத்த எங்கிருந்துவந்ததோ இவர்களுக்கிந்தத் துணிவு. இதுவே நமது உத்தரம்—"மகிமைபெற்ற நமதரசரைக் குடிகளே தெரிந்தெடுத்தார்; நாம் வழிபடும் மதம் ஒப்பற்ற ஜீவகாருண்யத்தை உபதேசிப்பதுமன்றி, மரணத்திற்குப்பின் மோட்சமுண்டென்னும் நம்பிக்கையையும் நமக்குக் கொடுக்கின்றது"—சொல்லுங்களிதை இக் கள்வர்களுக்கு; வேறெவ்வித மாறுபாடுகளும் எங்களுக்கு வேண்டாவென்று சொல்லிவிடுங்கள். அதுவும் அவர்கள் காட்டும் வழியைத் திரும்பியும் பார்க்கமாட்டோம் என்று சொல்லுங்கள்.

[பெருவிய போர்வீரர்கள் ஆரவாரஞ்செய்து தலைவணங்குகின்ருர்]

அத்தாலிபா:—(ரோலாவைத் தழுவுகின்ருன்) நல்லது, நண்பர்காள். இத் தூய உண்மையை நம் மனத்தில் ஊன்றி அர்ச்சனையைத் துவக்குவோம்.

[சப்தமின்றி எல்லோரும் வரிசைவரிசையாய் நிற்கின்றனர். குருக்கள் பீடத்தைச் சுற்றிநிற்கக் குருத்தலைவர் அர்ச்சனைசெய்ய ஆரம்பிக்கின்றனர். தலைமைக்குரு சொன்னதை மற்றக்குருக்களும் சூரியகன்னிகைகளும் பின்பாட்டாகச் சொல்லுகின்றனர். மேலிருந்து தீக்கொழுந்தொன்று பீடத்தின்மேல் வந்து இறங்குகின்றது. எல்லோரும் எழுந்து புகழ்பாடுகின்றனர்.]

நமது நைவேத்தியம் அங்கீகரிக்கப்பட்டது. நண்பர்காள் வாளையுருவிப் போருக்கு ஆயத்தமாவீர்.

[ஒரேனே வருகின்ருன்]

ஒரேனே:—பகைவர்! பகைவர்!!

அத்தாலிபா:—எவ்வளவு தூரத்தில் ?

ஒரேனே:—அக் குன்றின் சிகரத்தினின்று நான் நாற்றிசையும் நோக்குங்கால் பகைவர் படைகிளப்பி நமது இருப்பிடத்தை இலக்குவைத்து வரக்கண்டேன். நாமெல்லோரும் இவ்விடம் வந்துவிட்டது அவர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும்.

ரோலா:—வெகுதூரம் வாராமுன்னர் நாமே முன்சென்று எதிர்க்கவேண்டு மவர்களை.

அத்தாலிபா:—நீங்களோ பெண்காள், உங்களருமைக் குழந்தைகளுடன் குறிப்பிட்ட விடத்திற்கு விரைவிற் போய்ச் சேருங்கள்.

கோரா:—ஓ! பிராணநாதா! (அலான்ஸோவைத் தழுவிக் கொள்கின்ருள்)

அலான்ஸோ:—மறுபடியும் சந்திப்போம் நாமிருவரும்.

கோரா:–போவதற்குமுன்னர் எங்களை இன்னெருதரம் வாழ்த்திச் செல்லுங்கள்.

அலான்ஸோ:—எனது அன்பே உன்னையும், எனது செல்வமே உன்னையும், கடவுள் வாழ்த்தி ஆசீர்வதிப்பார்.

அத்தாலிபா:—புறப்படுங்கள்! புறப்படுங்கள்! ஒரு கணமுந் தாழலாகாது.

கோரா:— விடைபெற்றுக்கொள்கின்றேன், என தன்ப! உனதுயிர் எனதென்பதைமாத்திரம் மறத்தலாகாது!

ரோலா:–(கோரா அவனருகிற் செல்லும்போது)ரோலாவுக்குப் பிரிவுமொழி யொன்றுகூட இல்லையா?

கோலா:—(ரோலாவின் கையைப் பிடித்துக்கொண்டு) போய்வருகின்றனையா? வீரமுடன் ஏகி வெற்றியுடன் வருவாய் நீ. என்னுயிரேயாய நாயகனைக் காக்கலாவது உன் கடன்.

[கோரா குழந்தையுடன் போகின்றாள்.]

அத்தாலிபா :—(தன் வாளையுருவிக் கொண்டு) எனது சகோதரர்களே, எனது மைந்தர்காள், எனது நண்பர்காள், உங்கள் பேராற்றல் இவ்வளவென்ப தறிவேன். யுத்தத்தில் தோல்வியடைவோ மென்று தோன்றினால், மனத்தளர்ச்சிக்குக் கடைசிவிடம் கொடுங்கள். போர்முகத்தில் வெற்றிபெறுவோமானால் பகைவர்க்கு இரக்கம் காட்டுவது உங்கள் முதல் கருத்தா யிருக்கட்டும். அலான்ஸோ, மலைவழியைக் காத்துநில் நீ: வனத்திற்கு வலப்புறம் ரோலாவினிடம். நானோ நேரே எதிர்சென்று போரிற் கைகலக்கின்றேன். ஒன்று, நான் என் பிரஜைகளைக் காப்பாற்றிக் காணவேண்டும், அல்லது என் பிரஜைகள் தங்கள் அரசன் வெட்டுண்பதைக் காணவேண்டும் அதுவரையில் போர்முகத்தினின்று மீளேன்.

[வரிசையாய்ப் போகின்றார்கள்]

யாப்பிலக்கணம்

தளை

[190-வது பக்கத் தொடர்ச்சி]

வெண்டளை.

வெண்பா என்னும் பாட்டில் நால்வகை இயற்சீர்களும், உரிச்சீரில் வெண்பாவுரிச்சீர் எனப்படுகின்ற காய்ச்சீர்கள் நான்கும் வரலாம் என்றும், எல்லாச்சீர்களும் இயற்சீர்களாயிருந்தாலும், அல்லது வெண்சீர்களாயிருந்தாலும் அல்லது இயற்சீர்களும் வெண்சீர்களுமாய் விரவிவந்தாலும் அவை வெண்டளை ஓசைகொண்டு அமையவேண்டும் என்றும், அவ்வெண்டளை என்பது இயற்சீர்வெண்டளை வெண்சீர்வெண்டளை என்று இருவகைப்படும் என்றும்; நிலைச்சீர் இயற்சீராயிருக்க அதன் ஈற்றுஅசைக்கு மாறாக வருஞ்சீர் முதலசை நிற்பது இயற்சீர்வெண்டளையும், நிலைச்சீர் வெண்சீராயின் வருஞ்சீர்முதலிலும் நேரசைநிற்பது வெண்சீர்வெண்டளையும் ஆகும் என்றும், நிலைச்சீர் வருஞ்சீர் இரண்டும் இயற்சீராயின் சிறப்புடை இயற்சீர் வெண்டளை எனவும், நிலைச்சீர் இயற்சீராயிருக்க வருஞ்சீர் வெண்சீராயின் சிறப்பில் இயற்சீர் வெண்டளை எனவும், அப்படியே, நிலைச்சீர் வருஞ்சீர் இரண்டும் வெண்சீராயின் சிறப்புடை வெண்சீர் வெண்டளை யெனவும், நிலைச்சீர் வெண்சீராக வருஞ்சீர் இயற்சீராயின் சிறப்பில் வெண்சீர் வெண்டளை எனவும் அவ்வெண்டளைகள் கருதப்படும் என்றும் முன்னாள் கூறினோம்.

(குறிப்பு:—இயற்சீர் = ஈரசைச்சீர். உரிச்சீர் = மூவசைச்சீர். வெண்பாஉரிச்சீர் = வெண்சீர் = காய்ச்சீர் = முதலிரண்டு அசைகளும் எவையாயிருப்பினும் மூன்றாவது நேரசையாயிருக்கின்ற மூவசைச்சீர்கள்.)

இவைகளை நினைவில் வைத்துக்கொள்ளக் கீழ்க்காணுங் குறிப்புப் பயன்படும்:—

நிலைச்சீர். + வருஞ்சீர். = தளை.

இயற்சீர் வெண்டளை
- தேமா அல்லது புளிமா + { புளிமா, கருவிளம் } = சிறப்புடை இயற்சீர் வெண்டளை
- தேமா அல்லது புளிமா + { கருவிளங்காய், புளிமாங்காய் } = சிறப்பில் இயற்சீர் வெண்டளை
- கருவிளம் அல்லது கூவிளம் + { கூவிளம், தேமா } = சிறப்புடை இயற்சீர் வெண்டளை
- கருவிளம் அல்லது கூவிளம் + { கூவிளங்காய், தேமாங்காய் } = சிறப்பில் இயற்சீர் வெண்டளை

வெண்சீர் வெண்டளை
- { கருவிளங்காய், தேமாங்காய், புளிமாங்காய், கூவிளங்காய் } + { தேமா, கூவிளம் } = சிறப்பில் வெண்சீர் வெண்டளை
- { கருவிளங்காய், தேமாங்காய், புளிமாங்காய், கூவிளங்காய் } + { கூவிளங்காய், தேமாங்காய் } = சிறப்புடை வெண்சீர் வெண்டளை

இனி இவ்வெண்டளைகள் செய்யுளின்கண் அமையும் விதங்களை ஆராய்வோம்:— [ங்

விளைபொருண்மே லண்ணல் விரும்பினையே வீண்டெ
கிளையழுகை கேட்பதற்கு முன்னே—விளைதேன்
புடையூறு பூந்தார் புனைகழலாய் போக்கிற்
கிடையூறு வாராம லேகு.

[பெருமானே, பெருகுகின்ற பொருளைஈட்டும்பொருட்டு நீ எம்மைவிட்டுப் போக விரும்பினையானால்,விளைகின்றதேன் ஊறுகின்ற பூமாலையையும் அலங்கரிக்கப்பெற்ற கழலையும் அணிந்தவனே, உன் போக்கிற்கு இடையூறு வாராமல், எம் சுற்றத்தாரது அழுகைக்குரல் கேட்பதற்குமுன்னே போய்விடு;—என்பது இச் செய்யுளின் பொருள். மணம்புகுந்து வாழும் நாயகன்ஒருவன் தான் பொருளீட்டிவரும்பொருட்டுச் சிறிதுகாலம் வேற்றிடஞ் செல்லக் கருதியிருப்பதைத் தன் காதன்மனையாளுக்கு உரைக்க, அவள் அப்பிரிவிற்கு ஆற்றாளாய் அவனைப் போகவேண்டா வென விலக்குங் கருத்தினோடு, "நீ பிரிவதென்றே நிச்சயமானால் நானும்என் தோழியர்களும் உடனேஉயிர்நீங்கிவிடுவோம். எம் சுற்றத்தாரெல்லாரும் அழுவார். அவ்வழுகைக்கிடையே நீ போவது நேரிதன்றென நினைத்துத் தங்கிவிடவேண்டிவரலா மாதலின், அவ்விடையூறு விளையாமல்,கிளையழுகை கேட்பதற்கு முன்னே போய்விடு" என அவன் எண்ணத்திற்குத் துணை செய்வாள்போல் அவனைப் போகாமல் நிறுத்தமுயன்ற அன்பின் திறமையைத் தோற்றுவிக்கும் இச்செய்யுள்]

(1) விளைபொருண்மே லண்ணல் = கருவிளங்காய் + தேமா—நிலைச்சீர் வெண்சீராயிருக்க, அதன் ஈற்றிலும் வருஞ்சீர்முதலிலும் நேரசையே ஒன்றியிருத்தலால் இது வெண்டளை. விளை-பொருண்-மே, என்னும் நிலைச்சீர் வெண்சீராகையால் இது வெண்சீர் வெண்டளை. ஆனால் வருஞ்சீரும் வெண்சீராயிராமல் லண் - ணல் என இயற்சீராயிருப்பதால் இது, சிறப்பில் வெண்சீர் வெண்டளை.

(2) லண்ணல் விரும்பினையே = தேமா + கருவிளங்காய்—நிலைச்சீர் இயற்சீராயிருக்க அதன் ஈற்றிலுள்ள 'ணல்' என்னும் நேரசைக்கு மாறாக வருஞ்சீர் முதலில் 'விரும்' என்னும் நிரையசைநிற்றலால் இது வெண்டளை. நிலைச்சீர் இயற்சீர் ஆகையால் இது இயற்சீர்வெண்டளை. வருஞ்சீரும் இயற்சீராயில்லாமல் மூவசைச் சீராயிருத்தலால் இது சிறப்பில் இயற்சீர் வெண்டளை.

(3) விரும்பினையே வீண்டெங் = கருவிளங்காய் + தேமா—இது, 1-வதைப்போல் சிறப்பில் வெண்சீர் வெண்டளை.

(4) வீண்டெங் கிளையழுகை = தேமா + கருவிளங்காய்—இது 2-வதைப்போல் சிறப்பில் இயற்சீர் வெண்டளை.

(5) கிளையழுகை கேட்பதற்கு = கருவிளங்காய் + கூவிளங்காய்—நிலைச்சீர் வெண்சீராயிருக்க அதன் ஈற்றசையைப்போல் வருஞ்சீர்முதலசையும் நேரசையாகவே ஒன்றியிருத்தலால் இது வெண்டளை. நிலைச்சீர் வெண்சீரா யிருத்தலால் இது வெண்சீர்வெண்டளை. நிலைச்சீர்போல் வருஞ்சீரும் வெண்சீராயிருத்தலால் இது சிறப்புடை வெண்சீர் வெண்டளை.

(6) கேட்பதற்கு முன்னே = கூவிளங்காய் + தேமா–இது. 1-வதையும் 3-வதையும்போல் சிறப்பில் வெண்சீர் வெண்டளை.

(7) முன்னே விளைதேன் = தேமா + புளிமா—நிலைச்சீர் இயற்சீராயிருக்க அதன் ஈற்றிலுள்ள நேரசைக்கு மாறாக வருஞ்சீர் முதலில் நிரையசை நிற்றலால் இது வெண்டளை. நிலைச்சீர் இயற்சீராயிருத்தலால் இது இயற்சீர் வெண்டளை. வருஞ்சீரும் இயற்சீராகவே இருத்தலால் இது சிறப்புடை இயற்சீர் வெண்டளை.

(8) விளைதேன் புடையூறு = புளிமா + புளிமாங்காய்—இது, 2-வதையும் 4-வதையும்போல் சிறப்பில் இயற்சீர் வெண்டளை.

(9) புடையூறு பூந்தார் = புளிமாங்காய் + தேமா—இது 1, 3, 6-வதைப்போல் சிறப்பில் வெண்சீர் வெண்டளை.

(10) பூந்தார் புனைகழலாய் = தேமா + கருவிளங்காய்—இது 2, 4, 8-வதைப்போல் சிறப்பில் இயற்சீர் வெண்டளை.

(11) புனைகழலாய் போக்கிற் = கருவிளங்காய் + தேமா—இது 1, 3, 6, 9-வதைப்போல் சிறப்பில் வெண்சீர் வெண்டளை.

(12) போக்கிற் கிடையூறு = தேமா + புளிமாங்காய்–இது 2, 4, 8, 10-வதைப்போல் சிறப்பில் இயற்சீர் வெண்டளை.

(13) கிடையூறு வாராம = புளிமாங்காய் + தேமாங்காய்—இது, 5-வதைப்போல் சிறப்புடை வெண்சீர் வெண்டளை.

(14) வாராம லேகு = தேமாங்காய் + தேமா — இது 1, 3, 6, 9, 11-வதைப்போல் சிறப்பில் வெண்சீர் வெண்டளை.

இன்னொரு செய்யுள் எடுத்துக் கொள்வோம்.—

நளிகடற் (1) றண்சேர்ப்ப (2) நல்கூர்ந்த (3) மக்கட் (4) கணிகல (5) மாவ (6) தடக்கம் (7)—பணிவில்சீர் (8) மாத்திரை (9) யின்றி (10) நடக்குமேல் (11) வாழுமூர் (12) கோத்திரங் (13) கூறப் (14) படும்.

[குளிர்ந்த கடற்கரையுடையவனே, வறுமையுற்றவர்க்கு அணிகலம் ஆவது அடக்கமுடைமை. பணிவு இல்லாது நேரான அளவைக்கடந்து நடப்பாராயின், அவர் வாழ்கின்ற ஊராரே அவருடைய குடிப்பிறப்பைப் பழித்துப் பேசுவார்]

(1) சிறப்பில் இயற்சீர் வெண்டளை. (2) சிறப்புடை வெண்சீர் வெண்டளை. (3) சிறப்பில் வெண்சீர் வெண்டளை. (4) சிறப்புடை இயற்சீர் வெண்டளை (5) சிறப்புடை இயற்சீர் வெண்டளை. (6) சிறப்புடை இயற்சீர் வெண்டளை. (7) சிறப்பில் இயற்சீர் வெண்டளை. (8) சிறப்பில் வெண்சீர் வெண்டளை. (9) சிறப்புடை இயற்சீர் வெண்டளை. (10) சிறப்புடை இயற்சீர் வெண்டளை. (11) சிறப்புடை இயற்சீர் வெண்டளை. (12) சிறப்புடை இயற்சீர் வெண்டளை. (13) சிறப்புடை யியற்சீர் வெண்டளை. (14) சிறப்பில் இயற்சீர் வெண்டளை.

குறிப்பு:—இயற்சீரோடு இயற்சீரும், வெண்சீரோடு வெண்சீரும் தொடர்ந்துவருந் தளை சிறப்புடையது என்றோம். அப்படியல்லாது வேற்றுச் சீரைத் தொடர்ந்து வருவது சிறப்பில் தளை. இச்செய்யுளின் ஈற்றில் இருக்கும் 'படும்' என்பது ஓரசைச்சீர் (124-வது பக்கம்). ஆதலால், 'கூறப் படும்' என்பது சிறப்பில் இயற்சீர் வெண்டளை ஆயிற்று.

இச்செய்யுளில், நளிகடற் றண்சேர்ப்ப, கணிகல மாவ, மாத்திரை யின்றி, வாழுமூர் கோத்திரங், கோத்திரங் கூறப், என்னுமிவைகளில், நிலைச்சீர் நிரையீற்று இயற்சீராக (விளச்சீர்) வருஞ்சீர் முதலில் நேரசை நின்று, வெண்டளை அமைந்தவாறு கண்டுகொள்க.

இவ்வாறே, 'நளவெண்பா' போன்ற வெண்பா நூலின்கண் உள்ள செய்யுள்களின் சிலவற்றை ஆராய்ந்து, கண்டமாத்திரத்தில் வெண்டளை இது வென எளிதில் தெரிந்துகொள்ளும்படி பயின்று கொள்க. அதன்பின், உங்களுக்கு மனப்பாடமாய்த் தெரிந்திருக்கும் வெண்பாக்களை வரைந்து வெண்டளைபிறழாமல் அலகிட்டுப் பயின்று கொள்ளல்நலம். அலகிடல், என்பதற்குச் செய்யுளடிகளைச் சீர்களாகப் பிரித்தல் என்பது பொருள் உதாரணமாக,

காதலியைக்காரிருளிற்கானகத்தேகைவிட்ட
பாதகனைப்பார்க்கப்படாதென்றோநாத
மளிக்கின்றவாழிவாயாங்கலவவோடி
வொளிக்கின்றதென்னோவுரை.

என்னும் நளவெண்பாச் செய்யுள் யாவருக்குந் தெரிந்திருக்கும். இதனை இப்படிச் சீராகப் பிரிக்காமல் முதலில் எழுதிக்கொள்ளுங்கள். பிறகு, சீர்கள் எவ்வாறு பிரிந்தால் வெண்டளை பிறழாதோ அவ்வாறு பிரித்து எழுதிப் பயிலுங்கள். முதல் மூன்று அடிகள் ஒவ்வொன்றிலும் நான்கு சீர்களும், ஈற்றடியில் மூன்று சீர்களும் வருதல் வேண்டும்.

காதலியைக் காரிருளிற் கானகத்தே கைவிட்ட
பாதகனைப் பார்க்கப் படாதென்றோ—நாத
மளிக்கின்ற வாழிவா யாங்கலவ வோடி
வொளிக்கின்ற தென்னோ வுரை.

எனப் பிரிவது தெரியவரும். முதலடியில், சொற்கள் சிதையாமல், பொருளைத் தொடர்ந்து ஓசை நயமுடன், வெண்டளையமைந்து சீர்கள் பிரிகின்றன. நான்கு தளைகளும் சிறப்புடை வெண்சீர் வெண்டளை. இப்படிக்கின்றி வேறெப்படிப் பிரித்தாலும் ஓசையும்

சொற்களும் சிதைவது மாத்திரமன்றி வெண்டளை யும் பிறழ்வதைக் காண்பீர்.

காத லியைக்கா ரிருளிற்கா னகத்தேகை விட்ட, என முதலடியைப் பிரித்தால், ஐந்துசீர் ஆவதுடன் ரிருளிற்கா னகத்தேகை, என்னுமிடத்து நிலைச்சீர் வெண்சீராயிருக்க வருஞ்சீர்முதலில் நிரையசைவந்து வெண்டளை பிறழ்கின்றது.

இரண்டாவது அடியை,
பாதகனைப் பார்க்கப்ப டாதென்றோ நாத

எனப்பிரித்தாலும் வெண்டளை பிறழாது. பார்க்கப் படாதென்றோ, என்பது இயற்சீர் வெண்டளையாகும்; பார்க்கப்ப டாதென்றோஎன்பது வெண்சீர்வெண்டளை யாகும். ஆனால் இப்படிப் பிரித்து ஓதினால் ஓசை கெடும். தளையும் பிறழாமல் ஓசையுங்கெடாமல் பிரிக்க இயலுமாயின் அவ்வாறே பிரித்தல் வேண்டும். இப் படியே நான்காவது அடியும்,

வொளிக்கின் றதென்னோ வுரை

எனவும் தளை பிறழாமல் பிரிய இயலுமாயினும், ஓசையைக் கருதுமிடத்து, வொளிக்கின்ற தென்னோ வுரை, எனப் பிரித்தலே நலமென்பது புலப்படும்.

இன்னொரு உதாரணம் எடுத்துக் கொள்வோம்:—

ஒருநாளுணவையொழியென்றுலொழியாய்

என்னும் வெண்பா அடி எல்லார்க்குந் தெரிந்த தொன்று. இதனை, பொருளையும் சொல்லையும் பற்றிப் பிரித்தால், ஒருநா ளுணவை யொழியென்று லொழியாய், எனப் பிரியும். எனினும் இதுதவறு. ஒருநா ளுணவை, என்பதும், ளுணவை யொழி யென்று, என்பதும், இயற்சீர் வெண்டளைகளா யமைந்தபோதிலும்,யொழியென்று லொழியாய்,என்பதில் வெண்டளை பிறழ்ந்துவிடும். ஏனெனில், யொழியென்று, என்னும் நிலைச்சீர் வெண்சீராக, வருஞ்சீர் முதலில் நேரசை வராமல், லொழி - யாய், நிரையசை வந்துவிட்டபடியால் இது வெண்டளையாகாது. இப்படிக்கின்றி, 'ஒருநா ளுணவையொழி யென்று லொழியாய்' என அலகிட்டால் எங்கும் வெண்டளை கெடாமல் சீர்கள் பிரியக் காண்பீர். இப்பொழுது, 'ளுணவையொழி' என்பது ளுண - வையொ - ழி என வெண்சீராய் நிற்க வருஞ்சீராகிய 'யென்று' என்பதன் முதலிலும் நேரசையாகி வெண்டளை அமைகின்றது. இனி, யென்று லொழியாய், என்பது இயற்சீர் வெண்டளை ஆகக்கூடும்.

வெண்பாவிற்கு அலகிடும்போது முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது ஒன்றுளது. அதனை மறந்தால் வஞ்சிக்கப்படுவோம். அது யாதெனில், ஒரு அடியிலுள்ள சீர்களெல்லாம் தளை பிறழாமல் நடக்க வேண்டு மென்பது மாத்திரமன்றி, ஒரு அடியின் இறுதிச்சீரும் அடுத்த அடியின் முதல் சீருங்கூட வெண்டளை பிறழாமல் அமையவேண்டு மென்பதாம். இதனை ஒரு உதாரணத்தால் காட்டுவோம்:—

சீந்திநீர்க்கண்டந்தெறிசுக்குத்தேனளாய்
மோந்தபின்யார்க்குந்தலைக்குத்தில்காந்தி
மலைக்குத்துமால்யானைவள்ளுவர்முப்பாலாற்
றலைக்குத்துத்தீர்வுசாத்தற்கு.

இந்தச் செய்யுளை வேறெடுத்தெழுதி நீங்களே முதலில் அலக்கிட்டுப்பார்த்துப் பிறகு அது தவறில்லாமல் இருக்கின்றதாவென்று கீழ் நாம் அலகிட்டுக் காட்டியிருப்பதோடு ஒப்புநோக்கிக் கொள்ளுங்கள்:-

சீந்திநீர்க் கண்டந் தெறிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்குந் தலைக்குத்தில்—காந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலாற்
றலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு.

இதனில், முதலடி ஈற்றிலுள்ள, தேனளாய் என்னும் சீரும் இரண்டாவது அடி முதலிலுள்ள மோந்தபின் என்னும் சீரும் வெண்டளையாய் அமைந்திருத்தல் காண்க. அப்படியே, காந்தி மலைக்குத்து, என இரண்டாவது அடி ஈற்றுச்சீரும் மூன்றாவதடி முதற்சீரும் வெண்டளையில் அமைந்தன. அப்படியே, பாலாற் றலைக்குத்து எனமூன்றாவது அடிஈற்றுச்சீரும் நான்காவது அடி முதற்சீரும் வெண்டளை கொண்டுள்ளன. இந்தச் செய்யுளின் மூன்றாவது அடியை, 'மலைக்குத்து மால்யானை வள்ளுவர் முப்பாலாற்' என அலகிட்டாலும் அவ்வடியிலுள்ள சீர்கள்வரையில் வெண்டளை பிறழ்ந்திடாது. எனினும், அப்பொழுது முப்பாலாற் என்னும் ஈற்றுச்சீர் வெண்சீர் ஆய்விடுவதால், அடுத்த நான்காவது அடியில் வரும் முதற்சீரின் முதலில் நிரையசையுடன் சேர்ந்து வெண்டளை ஆக இயலாது கெடும். இப்படிக்கின்றி,'வள்ளுவர்முப் பாலாற் றலைக்குத்து' என அலகிடுங்கால் எல்லாம் வெண்டளை ஆவது காண்க.

ஆசிரியத்தளை வெண்டளை என்னும் இரண்டு வகைத் தளைகள் கற்றிருக்கின்றீர். மருட்பா, என்ற ஒருவிதப்பா இருக்கின்றது. அதனில் முதலிரண்டடிகள் வெண்பாவாகவும், பின்னிரண்டடிகள் ஆசிரியப்பாவாகவும் நடக்கும். அந்த மருட்பா ஒன்று இங்கு உதாரணமாக எழுதுவோம்:—

தன்க ணளியவாய் நின்றேற்குத் தார்விடலை
வன்கண்ண னல்கா னெனவாடு—மென்க
ணிடரினும் பெரிதா லெவ்வம்
படரினும் பெரிதாற் பாவியிப் பகலே.

[ஓர் விடலையைக் கண்டு காமுற்றிருந்த ஒரு பெண், அவனை அடையப்பெறுமையால் மிக வருந்தி, பகற்பொழுதே அவன் வருவதற்கு இடையூறு செய்கின்றதென மதித்து, அதனை வெறுத்துக் கூறிய இப்பாசுரத்தின் பொருள் பின்வருமாறு:—''மாலையை அணிந்த அக் குமரன், அவனது அருளை வேண்டி நிற்கின்ற என்பால் இரக்கமில்லானாகித் தன் காதலை அளிக்காமலிருக்கின்றான் என்பதை நினைத்துச் சோரும் என்னுடைய வருத்தத்தைக் காட்டிலும் நான் இதனால் படும் அவமானம் மிகப் பெரிது. நான் ஏங்கி ஏங்கி நினைக்கின்ற நினைவிலும் பெரியது பாவியான இந்தப் பகற்பொழுது]

இப்பாட்டில், முதலிரண்டு அடிகளிலுள்ள எல்லாச் சீர்களும் வெண்டளைகொண்டு நிற்பதும், பின்னிரண்டடிகளிலுள்ள சீர்கள் ஆசிரியத்தளைகொண்டு நிற்பதும்காண்க [லெவ்வம் படரினும்,என்பது மாத்திரம் ஆசிரியத்தளை அன்று; அது வெண்டளை. எனினும், வெண்பாவைப்போல் ஆசிரியப்பாவில் ஓரடியீற்றுச் சீரும் மறு அடி முதற்சீரும் ஆசிரியத்தளை கொள்ள வேண்டுமெனும் நியதியில்லை; ஆசிரியப்பாவினுள் வெண்டளை வருதலே கூடாது என்ற விதியும் இல்லை. வெண்பாவினுள் தான் வேற்றுத்தளை வரலாகாது]

கலித்தளை ஆமாறு அடுத்தவாரங் கற்போம்.

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[187-வது பக்கத் தொடர்ச்சி]

3. குமார காலச் சருக்கம்

93. பளிங்கொளி கதுவப் போழ்ந்த
பலகைகண் குலவச் சேர்த்தி
விளங்கொளி விளிம்பிற் செம்பொன்
வேதிகை வெள்ளி வேயுட்
டுளங்கொளி பவளத் திண்காற்
சுடர்மணி தவழும் பூமி
வளங்கவின் றனைய தாய
மண்டப மலியப் புக்கான். 25.

ஒளி கதுவ - ஒளிகொள்ளும்படி, போழ்ந்த - அறுத்த, பளிங்கு - ஸ்படிகங்களின், பலகை - பலகைகளை, கண் குலவ - காண்போர் கண்கள் இரமிக்கும்படி, சேர்த்தி - அணைத்து, விளிம்பில் - ஓரத்தில், விளங்கு ஒளி - ஒளிவிளங்குகின்ற, செம்பொன் - செம்பொன்னாலாகிய, வேதிகை - மேடைகளையும்; வெள்ளி - வெள்ளியாலாகிய, வேயுள் - மாடங்களையும்; ஒளிதுளங்கு - ஒளி வீசுகின்ற, பவளம்-பவளத்தினால் ஆகிய, திண் - வலியமைந்த, கால் - தூண்களிற்பதித்த, சுடர் - பிரகாசிக்கின்ற, மணி - இரத்தினங்களின் ஒளியானது, தவழும் - பரவுகின்ற, பூமி - தரையையும் உடையதாய், வளம் - எல்லா வளங்களும், கவின்று - அழகையெய்தி, அனையது ஆய - இம்மண்டபம் போன்ற தொன்று ஆனால் போன்ற, மண்டபம் - மண்டபம், மலிய - நிறையும்படி, புக்கான் - (பயாபதி அரசன்) சேர்ந்தான்.

வேயுள் என்பது மாடம் (niche). துளங்கொளி பவளம், என்பதை, ஒளிதுளங்கு பவளம் என மாற்றிப் பொருள் கொள்ளவேண்டும். ஒளிபவளம், என்பதற்கு ஒளியைவீசும் பவளம், என இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையாய்ப் பொருள்செய்ய இயலாது. அவ்வாறாயின், துளங்கொளிப்பவளம், என வலி மிகுந்திருத்தல் வேண்டும். ஒளிபவளம், என்பதை வினைத்தொகையாகக் கொள்ளவும் இயலாது; ஏனெனில், ஒளி என்பது இங்குப்பெயர்ச்சொல். பிரகாசம்செய் என்னும் பொருளில் அது வினைப்பகுதியாய் நிற்குமாறில்லை. பிரகாசம்செய் என்னும் பொருளில் வரும் வினைப் பகுதி ஒளிர், என்பது. வினைச்சொல்லில் ஒளி என்பதற்கு மறை அல்லது மறைத்துவை என்பதே பொருள். ஒளிதுளங்கு பவளம், என்னும் பொருளில் துளங்கொளி பவளம் என மாறி வந்திருக்கின்ற காரணத்தை முன்னிட்டு, வல்லினமெய் மிகவில்லை போலும். வளங்கவின்று அனைய தாய மண்டபம்— கவின் - அழகு, கவின்று - அழகுகொண்டு, உலகத்திலுள்ள எல்லாச் செல்வ வளங்களும் ஒன்று சேர்ந்ததால் உண்டாகும் அழகு எவ்விதம் இருக்குமெனின், இம் மண்டபம்போல் இருக்கும் எனத் தகுந்த மண்டபம். மண்டபம் மலியப்புக்கான்—அத்தகைய மண்டபமும் இவ்வரசன் இல்லாதபோது குறைவுற்றுத் தோன்றுவதால், அக்குறை நீங்கி நிறைவெய்தும்படி அரசன் எய்தினன். இவனால் அம் மண்டபம் பொலிவடைகின்றதேயன்றி அம்மண்டபத்தில் அமர்வதால் இவனுக்குப் புதிய சிறப்பொன்றும் புகுவதில்லை.

---

94. குஞ்சரக் குழவி கவ்விக்
குளிர்மதிக் கோடு போலு
மஞ்சுட ரெயிற்ற வாளி
யணிமுக மலர வூன்றிச்
செஞ்சுட ரணிபொற் சிங்கா
சனமிசைச் சேர்ந்த செல்வன்
வெஞ்சுட ருதயத் துச்சி
விரிந்தவெய் யவனொ டொத்தான். 26.

குஞ்சரம் குழவி கவ்வி - யானையின் கன்றைக் கவ்விக்கொண்டு, குளிர்மதி கோடுபோலும் - குளிர்ந்த சந்திரனது பிறைபோன்ற, அம் சுடர் எயிற்ற - அழகிய ஒளியுடைய கோரப்பற்களையுடைய, ஆளி - சிங்கத்தின், அணிமுகம் - அழகிய முகம், மலர - விளங்கும்படி, ஊன்றி - செதுக்கி, செம்சுடர் அணி - சிவந்த ஒளியையுடைய, பொன் சிங்காசனம் மிசை - பொன் சிங்காதனத்தின்மீது, சேர்ந்த - அமர்ந்திருந்த, செல்வன் - அவ்வரசன், உதயத்து உச்சி வெம் சுடர் விரித்த - உதயமலையின் உச்சியில் விரும்பத்தகுந்த கிரணங்களைப் பரப்பும், வெய்யவனொடு ஒத்தான் - சூரியனை ஒத்தான்.

கவ்வி, என்னும் வினையெச்சம், மலர என்னும் வினையெச்சத்தைக் கொண்டுமுடிகின்றது. ஊன்றி என்னும் வினையெச்சம், செஞ்சுடரணி, என்பதிலுள்ள அணி என்னும் காலங்கரந்த பெயரெச்சத்தைக் கொண்டுமுடிகின்றது. அரசனுக்கு உவமையாவதால், வெம்சுடர், என்பதற்கு வெப்பமுடைய கிரணம் எனப் பொருள்கொள்ளாமல், விரும்பத் தகுந்த கிரணம் எனப் பொருள்கண்டோம்.

---

95. பூமரு புரிந்த நுண்ணூற்
புரோகிதன் பொறிவண் டார்க்கு
மாமல ரணிந்த கண்ணி
மந்திரக் கிழவர் மன்னு
ரேமரு கடலந் தானை
யிறைமகன் குறிப்பு நோக்கித்
தாமரைச் செங்கட் சைகை
பணித்ததா னத்த ரானர். 27.

பூமரு - பொலிவோடு கூடியதாய், புரிந்த - திரித்த, நுண்நூல் - மெல்லிய பூணூலை அணிந்த, புரோகிதன் - புரோகிதனும்; பொறி - புள்ளிகளையுடைய, வண்டு - வண்டுகள், ஆர்க்கும் - ஒலிக்கின்ற, மா - சிறந்த, மலர் அணிந்த - மலர்களால் தொடுக்கப் பெற்ற, கண்ணி - மாலையை அணிந்த, மந்திரம் கிழவரும் - அமைச்சர்களும்; மன்னர்-பகைவர், ஏம் மரு - கலங்குதற்குரிய, கடல் அம் தானை - கடல்போன்ற அழகிய சேனையையுடைய, இறைமகன் - அரசனது,

குறிப்பு நோக்கி - குறிப்பைத் தெரிந்துகொண்டு, (அவன்) தாமரைச் செம் கண் - தாமரைபோன்ற சிவந்த கண்களின், சைகை - சாடையினுல், பணித்த- விதித்த, தானத்தர் ஆனுர் - ஆதனங்களை அடைந்தவர் ஆயினுர்.

புரோகிதனும் மந்திரக் கிழவரும் ஆதனத்தர் ஆனுர், என முடித்துக்கொள்க. பூமரு புரிந்த நுண்ணூல் புரோகிதன், என்பதற்கு, பொலிவுற விளங்கிய நுட்பமான நூற்களைக் கற்ற புரோகிதன், எனப் பொருளுரைக்கலாம் ஆயினும், பின், மாலையணிந்த மந்திரக்கிழவர் என வருவதற்கிணங்க, பூணூல் அணிந்த புரோகிதன் எனப் பொருள் கண்டோம். மன்னுதல் - பொருந்தல்; மன்னுர் - பொருந்தாதவர்- பகைவர். ஏம் - மயக்கம் (Bewilderment), ஏமம் என்பதன் இடைக்குறை.

---

96. முன்னவ ரிருந்த பின்னை
 மூரிநீ ருலகங் காக்கு
மன்னவன் கழலைத் தங்கண்
 மணிமுடி நுதியிற் றீட்டிப்
பின்னவன் பணித்த தானம்
 பெறுமுறை வகையிற் சேர்ந்தார்
மின்னிவர் கடகப் பைம்பூண்
 வென்றிவேல் வேந்த ரெல்லாம். 28.

முன் அவர் - முன் உரைத்த புரோகிதனும் மந்திரிகளும், இருந்த பின்னை - தங்கள் ஆதனங்களில் அமர்ந்தபிறகு, மின் இவர் - ஒளி தவழ்கின்ற, கடகம் பைம் பூண் - பசும்பொன்னுலாகிய கடகம் என்னும் ஆபரணத்தையும், வென்றி வேல் - வெற்றி பொருந்திய வேலாயுதத்தையும் உடைய, வேந்தர் எல்லாம் - அரசர்கள் எல்லாரும், தங்கள் - தங்களது, மணிமுடி நுதியில் - இரத்தினங்கள் இழைத்த கிரீடத்தின் முனையினுல், மூரி நீர் - பெருமையுடைய கடல் சூழ்ந்த, உலகம் காக்கும் - உலகத்தைக் காக்கின்ற, மன்னவன் - பயாபதி வேந்தனது, கழலை - பாதங்களை, தீட்டி - தீண்டி, பின் - பின்பு, அவன் - அவ்வரசன், பணித்த-விதித்த, தானம்-இடங்களை,பெறும் முறை வகையின் - தாம் பெறுதற்குரிய வரிசைக் கிரமப்படி, சேர்ந்தார் - எய்தினுர்.

மன்னவன்கழலைத் தங்கள் மணிமுடி நுதியில் தீட்டி, என்பதற்கு, மன்னவன் காலிலணிந்த வீரக் கழல்களைத் தங்கள் அழகிய கிரீடத்தின் நுனியினுல் விளக்கி, என்றும் பொருள்கொள்ளலாம். பயாபதி சக்கரவர்த்தியாகையால் மற்ற அரசர்களெல்லாரும் இவன்பாதங்களில் விழுந்து பணிந்தனர். அடிநிழல் அரசரை அளிக்கும் அண்ணல் இவன் என்றதற்கேற்ப இது நிகழ்கின்றது. நட்பரசர் இவ்வண்ணம் தம் தலைவனது காலில் விழுந்து பணியும்படி மற்ற உயர்தரக் கவிகள் செய்வதில்லை என நினைக்கின்றோம். "முத்த வெண்குடை மன்னனை (தயரதனை) முறை முறை (அரசர்) தொழுதார்" என்பர் கம்பர். அப்புலவர் தயரதன் பெருமையை உரைக்குங்கால்,

 ஆவரும் வன்மைநே ரறிந்து தீட்டலால்
 மேவருங் கையடை வேலுந் தேயுமால்
 கோவுடை நெடுமணி மகுட கோடியால்
 சேவடி யடைந்தபொற் கழலுந் தேயுமால்

என்பதிற் குறிக்கப்பெற்றவர் பகைத்தெழுந்து பின் அடங்கிய அரசர்க ளாதல்வேண்டும். புகழேந்திப் புலவர்,

 எந்தை கழலிணையி லெம்மருங்குங் காணலாம்
 கந்து சுளியும் கடாக்களிற்றில்—வந்து
 பணிமுடியிற் பார்காக்கும் பார்வேந்தர் தங்கள்
 மணிமுடியிற் றேய்ந்த வடு

என இந்திரசேனனைக்கொண்டு நளவேந்தனைப் புகழ்விக்குமிடத்தும் பகையரசர்களே குறிக்கப்பட்டிருக்கின்றனர். "ஒன்னலர் மணிமுடி யுரிஞ்சு தாளினுன்" என்ற நைடதஅடியில், பகையரசரே என்பது வெளிப்படை.

---

97. வழிமுறை பயின்று வந்த
 மரபினுர் மன்னர் கோமான்
விழுமல ரடிக்கண் மிக்க
 வன்பினுர் வென்றி நீரா
ரெழுவளர்த் தனைய தோளா
 ரிளையவ ரின்ன நீரா
ருழையவ ராக வைத்தா
 னோடைமால் களிற்றி னுனே. 29.

ஓடை - நெற்றிப்பட்டத்தைஅணிந்த, மால்-பெரிய (அல்லது மதமயக்கமுடைய), களிற்றினுன் - யானையையுடைய பயாபதிமன்னன்; வழிமுறை பயின்று வந்த மரபினுர் - வழிவழியாகப் பழகிவந்த சார்பினையுடையவர்களும், மன்னர்கோமான் - (தம்) சக்கிரவர்த்தியினது, விழு மலர் அடிக்கண் - சிறந்த தாமரை மலர்போன்ற பாதங்களினிடத்தில், மிக்க அன்பினுர் - மிக்க அன்பை உடையவர்களும், வென்றி நீரார் - வெற்றியே தமக்கு இயல்பாகப் பெற்றவர்களும், எழு வளர்த்து அனைய தோளார் - தூண்களை வளர்த்திருப்பது போன்ற தோள்களை உடையவர்களும், இளையவர் - இளமைப்பருவம் உடையவர்களும், இன்ன நீரார் - இன்னும் இத்தகைய பல தன்மையும் உடையவர்களை, உழையவர் ஆக வைத்தான் - தன்னருகில் இருக்கும் வீரர்களாக அமர்த்திக்கொண்டனன்.

---

98. காவல னென்னுஞ் செம்பொற்
 கற்பகங் கவின்ற போழ்தி
னுவல ரென்னும் வண்டு
 நகைமுகப் பெயரி னுய
பூவலர் பொலிவு நோக்கிப்
 புலமயங் களிப்ப வாகிப்
பாவல ரிசையிற் றோன்றப்
 பாடுபு பயின்ற வன்றே. 30.

காவலன் என்னும் - அரசன் என்ற இந்த, செம்பொன் கற்பகம் - செம்பொன் மயமான கற்பகத்தரு, கவின்ற போழ்தின் - இவ்வணம் அழகுற்றபொழுது, நகைமுகம் பெயரின் ஆய - முறுவலோடுகூடிய முகம் என்ற பெயர்பெற்ற, பூ அலர் பொலிவுநோக்கி- மலர் மலர்ந்த பொலிவைப் பார்த்து, நாவலர் என்னும் வண்டு - கவிகள் என்னப்படும் வண்டுகள், புலமயம் களிப்பஆகி - தம் மனமுழுவதும் களிப்புடையவைகளாகி, பா அலர் இசையில் தோன்ற - பாக்கள் விளங்குகின்ற இசையுடன் தோன்றும்பொருட்டு, பாடுபு- பாடிக்கொண்டு, பயின்ற - (அந்த மண்டபத்தை) அடைந்தன. (அன்றே - அசை).

அரசனைக் கற்பகத் தருவாகவும், அவன் முகத்தைக் கற்பகத்தின் மலராகவும், அரசன் முகமலரைக் கண்டு நெருங்குகின்ற நாவலர்களை வண்டாகவும்,

நாவலர்களது இசைப்பாடலை வண்டின் முரலலாகவும், இச்செய்யுள் உருவகஞ் செய்திருக்கின்றது. பயின்ற- இங்குப் பலவின்பால் வினைமுற்று. வண்டு என்பதற்கேற்பப் பயின்ற என அஃறிணையில் முடித்தார்.

---

99. பண்ணமை மகர நல்யாழ்ப்
 பனுவனூற் புலவர் பாடி
மண்ணமர் வளாக மெல்லா
 மலர்ந்தநின் புகழோ டொன்றி
விண்ணகம் விளங்கு திங்கள்
 வெண்குடை நிழலின் வைகிக்
கண்ணம ருலகங் காக்குங்
 கழலடி வாழ்க வென்றுர் 31.

பண் அமை - இசை அமைந்த, நல் மகரயாழ்-நல்ல மகர வீணையை ஏந்திய, பனுவல்நூல் புலவர் - இலக்கிய நூல்கள் பயின்றுள்ள புலவர்கள், பாடி - பாடிக்கொண்டு, "மண்ணமர் வளாகம் எல்லாம் - மண் திணிந்த உலகவட்டமெல்லாம், மலர்ந்த - பரந்து விளங்குகின்ற, நின்- உன்னுடைய, புகழோடு ஒன்றி- புகழைப்போல, விண் அகம் - ஆகாயத்தில், விளங்கு- விளங்குகின்ற, திங்கள் - சந்திரனைப்போன்ற, வெண்குடை நிழலின் வைகி - வெண்மையான குடையின் நிழலில் தங்கி, கண் அமர் - நித்திரை செய்கின்ற, உலகம் - உலகத்திலுள்ள சனங்களை, காக்கும்-காப்பாற்றுகின்ற, கழல் அடி - வீரக்கழல் அணிந்த உன் பாதங்கள், வாழ்க - வாழ்க," என்றுர் - என்றுர்.

அரசனது புகழெல்லாந் திரண்டு ஆகாயத்தில் விளங்குவது போன்றது சந்திரன்; அச்சந்திரன் போன்றது வெண்கொற்றக் குடை. அக்குடையின் நிழலில் அமைதியுடன் கண்ணயர்கின்றது உலகம்.

100. மஞ்சுடை மலையின் வல்லி
 தொடரவான் வணங்க நின்ற
வஞ்சுடர்க் கடவுட் காத்த
 வருங்குல மலரத் தோன்றி
வெஞ்சுட ரெஃக மொன்றின்
 வேந்துகண் ணகற்றி நின்ற
செஞ்சுடர் முடியி னுய்நின்
 கோலிது செல்க வென்றுர். 32.

மஞ்சு உடை - மேகங்களை உடைய, மலையின் - இமயமலையின்மீது, வல்லி - கொடிகள், தொடர - படரவும், வான் - தேவர்கள், வணங்க - வணங்கவும், நின்ற - தவம்செய்திருந்தவனும், அம்சுடர்க் கடவுள் - அழகிய கிரணங்களையுடைய சூரியபகவானை ஒத்தவனுமான வாகுவலி என்னும் அரசனுல், காத்த- வளர்க்கப்பெற்ற, அரும்குலம் - அருமையான இக்ஷ்வாகு குலம், மலர -விளங்கும்படி, தோன்றி - பிறந்து, வெம் சுடர் எஃகம் ஒன்றின் - கொடிய ஒளியையுடைய வேலாயுதம் ஒன்றினுல், வேந்து - பகையரசர்களின், கண் அகற்றி - பெரும்தத்தை நீக்கி, நின்ற - நிற்கின்ற, செம் சுடர் முடியினுய் - சிவந்த ஒளியையுடைய முடியைத் தரித்த மன்னு, நின் கோல் இது செல்க - உன் செங்கோல் இடையூறின்றி நடப்பதாக, என்றுர் - என்று நாவலர் வாழ்த்தினுர்.

இமயமலையிற் சென்று அருந்தவம் புரிந்த வாகுவலி என்னும் அரசனது மரபில் வந்தவன் பயாபதி. இவ்வாகுவலி யென்பவனது விடயம் பின் தூதுவிடு சருக்கத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

அப்பர்

அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்.

22 & 23 திருஷ்டி ஸ்தம்பனமும் வசீகரணமும்

[191-வது பக்கத் தொடர்ச்சி]

1. இவ்விரு கலைகளின் சம்பந்தம்.

இவ்விரண்டு கலைகளையும் ஆரியத்தில் வெவ்வேறாகக் கொள்ளுவராயினும், இவை ஒன்றிற்கொன்று மிக்க சம்பந்தமுடைய கலைகளாதலால் அவற்றை இவண் ஒருங்குசேர்த்து விவகரிப்போம்.

"அகத்தினழகு முகத்திற் றெரியு"மென்பது சாதாரண உலகவழக்கு. ஒருவரைப் பார்த்தவுடன் விரும்புகின்றோம், அல்லது வெறுக்கின்றோம். இவற்றின் காரணம் யாது என வினவின், மக்களிற் பெரும்பான்மையோர் யாதொரு காரணமும் பகரச் சக்தியற்றவராய் நிற்கின்றனர். ஏனெனில், அவரை வினவின் அவர் பகரும் விடையாவது, "ஐயா! ஏதோ நான் கண்ட அம்மனிதரிடம் கடூரமான முகக்குறி விளங்குகின்றது. அவர் நல்லவராயு மிருக்கலாம். ஆனுல் நான் வெறுப்புக் கொள்ளுங் காரணம் என்னுல் விளக்கக்கூடவில்லை" யென்றே பெரும்பாலும் முடிகின்றதாதலால், இதன் உண்மை என்னவென்று சற்று உற்று நோக்குவோம்.

சிலசமயங்களில் அழகான மனிதரை விரும்புவதும், அந்தமற்றவர்களை வெறுப்பதும் மனிதர்க்கு இயல்பாகும். ஆனுல் அறிவு முதிரமுதிர, அழகால் விரும்புவது, ஓரே பாலினராயிருப்பின் * ஏகதேசமே. பார்வை, நடையுடை பாவனைகள் சொல்நய முதலியனவே அறிஞர் திருட்டியை நிலைக்கச் செய்வனவும் மனதைக் கவரச்செய்வனவு மாம். இவ்வாறு விளங்கும் முகவசீகரணத்தைச் சிவபெருமான் திருநோக்கை உருவகப்படுத்தும் நிலையில், திருநாவுக்கரசு நாயனுர் பாடுவதைக் காண்க:—

 குனித்த புருவமும் கோவ்வைச்சேவ்
 வாயிற் குமிண் சிரிப்பும்
 பனித்த சடையும் பவளம்போன்
 மேனியிற் பால்வெண் ணீறும்

---

* வேலை வென்ற கண்ணுரை விரும்பிநீர்
சீலங் கெட்டுத் திகையன்மின் பேதைகாள்!
காலை யேதொழுங் காட்டுப்பள் ளியுறை
நீல கண்டனை நித்தல் நினைமினே!
மேலைத் திருக்காட்டுப்பள்ளி - திருக்குறுந்தொகை 8.

இனித்த முடைய வெடுத்தபொற்
பாதமும் காணப் பெற்ருல்
மனித்த பிறவியும் வேண்டுவ
தேயிந்த மா நிலத்தே.
கோயில் திருவிருத்தம் 4.

இவ்வாறு முகவசீகரணத்தால் நாம் பார்த்தமக்களில் லயமடைந்தும் ஏனைய பொருளை எண்ணமற்போவது முண்டு. மனிதத்தன்மை இங்ஙனமெனின் செயலற்றுப்போகச் செய்யும் சிவத்தன்மை † யென்னுணு தன்ருே. இதுவே திருப்புகலூரில் அப்பர் முத்தி பெறுங் காலத்திற் பாடிய பதிகத்தாலும் விளங்கும்:—

எண்ணுகே னென்சொல்லி யெண்ணு கேனே
எம்பெருமான் திருவடியை யெண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்ருேர் களைக ணில்லேன்
கழலடியே கைதொழுது காணி னல்லால்
ஒண்ணுள்ளே யொன்பது வாசல் வைத்தாய்
யொக்க வடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா வுன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

ஒருவனையு மல்லா துணரா துள்ள
முணர்ச்சி தமோற்றத் துள்ளே நின்ற
இருவரையு மூவரையு மென்மே லேவி
யில்லா தரவறுத்தாய்க் கில்லே னேலக்
கருவரைசூழ் கான லிலங்கை வேந்தன்
கடுந்தேர்மீ தோடாமை காலாற் செற்ற
பொருவரையா யுன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.
திருப்புகலூர் திருத்தாண்டகம் 1, 10.

2. இக்கலையின் ஏற்றம்.

திருஷ்டிஸ்தம்பன முண்டாக்கும் முகவசீகரமும் பெற்ற தாயுமானஸ்வாமிகளின் குருமூர்த்தியான மௌனகுருவின் இலக்கணம் அடியில்வருவதுகாண்க. அதில் அக்குருவின் கண்களாற் பார்க்கப்பட்ட காட்டுப்புலி ஒன்று பசுவைக் கண்டால் அதன் குணமே மாறித்தான் இரையாய்க்கொள்ளும் பசுவுடன்குலாவி விளையாடுமாம்:—

கானகம் இலங்குபுலி பசுவோடு குலாவுநின்
கண்காண மதயானைநீ
கைகாட்ட வுங்கையால் நெகிடிக் கெனப்பெரிய
கட்டைமிக வேந்திவருமே!
போனகம் அமைந்ததென வக்காம தேனுநின்
பொன்னடியி னின்றுசொலுமே
புவிராசர் கவிராசர் தவராச ரென்றுனைப்
போற்றிசய போற்றியென்பர்
ஞானகரு ணகர முகங்கண்ட போதிலே
நவநாத சித்தர்களுமுன்
நட்பினை விரும்புவார் சுகர்வாம தேவர்முதல்
ஞானிகளு முனைமெச்சுவார்
வானகமு மண்ணகமும் வந்தெதிர் வணங்கிடுமுன்
மகிமையது சொல்லவெளிதோ
மந்திரகுரு வேயோக தந்திரகுரு வேமூலன்
மரபின்வரு மௌனகுருவே!
மௌனகுரு வணக்கம் 7.

மேற்கண்ட செய்யுளால் நவநாத சித்தர்களும் முகவசீகரணத்தால் லயப்படக்கூடுமெனில், ஏனைய மக்கட் பிரிவிக்கும் அவ்வாறே யென்னல் மிகையன்ருே?

நல்வழியிலே நிற்போருக்கு இக்கலை கல்லாமலே வருமென்பது திண்ணம். நல்லோர் முகதரிசனமான வுடனே தீயோர் நடுங்குவதும் ஒரே இடத்தில் நிலைத்துச் செய்கையற்று நிற்பதும் நாம் இக்காலத்திலும் காண்கின்ருேம். தமது நோக்கினுலேயே, துஷ்டசந்துக்களைத் தடைசெய்து நிறுத்தலும், அவற்றிற்கு வேறு பார்வை நேராது கட்டுண்டு ஸ்தம்பிப்பதும் மந்திரக் கலையென்பர். ஆயினும் துஷ்டகாரியங்களும் பாவவிருத்தியும் செய்விப்பது கலையின்பாற் படாது. ஒருவனுடையதிருஷ்டியை நிலைக்கச் செய்வது எவ்வாறெனின், இரும்பைக் காந்தமானது இழுப்பது போலாம். அல்வழியிற் செல்லாமல்‡, நல்வழியில் நிலைக்கவைப்பதே இக்கலையின் ஏற்றமாகும்.

இரும்பைக் காந்த மிழுக்கின்ற வாறெனைத்
திரும்பிப் பார்க்க வொட்டாமல் திருவடிக்
கரும்பைத் தந்துகண் ணீர்கம் பலையெலாம்
அரும்பச் செய்யென தன்னையொப் பாமனே
தாயுமானவர் - (பொன்னைமாதாரை 24)

திருஷ்டி ஒரே நோக்காய் நிலைப்பதற்குக் காரணம் அந்நோக்கிலுள்ள இன்பம் வேறு பக்கத்திலின்மையாலும், திருஷ்டியைக் கவரும் பொருள் வேறு நோக்குக்கு இடம் கொடுக்காமலிருத்தலுமாம்:—

கண்க ளிரண்டு மவன்கழல் கண்டு களிப்பன வாகாதே
காரிகையார்கடம்வாழ்வி லென்வாழ்வுகடைப்படுமாகாதே
மண்களில் வந்துபி றந்திடு மாறும றந்திடு மாகாதே
மாலறி யாமலர்ப் பாதமி ரண்டும்வ ணங்குது மாகதே
பண்களி கூர்தரு பாடலோ டாடல்ப யின்றிடு மாகாதே
பாண்டிநன் னுடையான்படையாட்சிகள்பாடுதுமாகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்துவெ ளிப்படு மாகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்துவெ ளிப்படுமா யிடிலே
திருவாசகம்.

இவ்வாறே திருநாவுக்காசும்,

கண்ணி னுற்களி கூரக்கை யாற்ருெழு
தெண்ணு மாறறி யாதிளைப் பேன்றனை
விண்ணு ளார்தொழும் வீழிமி ழலையுள்
அண்ண லேயடி யேனைக் குறிக்கொளே.
திருவீழிமிழலைத் திருக்குறுந்தொகை 2

உன்னி வானவ ரோதிய சிந்தையில்
கன்ன றேன்கட வூரின் மயானத்தார்
தன்னை நோக்கித் தொழுதெழு வார்க்கெலாம்
பின்னை யென்னுர் பெருமா னடிகளே.
திருக்கடவூர் மயானம்-திருக்குறுந்தொகை 2.

இத்தகைய சிவபெருமானதுவசீகரம் சுந்தரமூர்த்தி நாயனுர் திருவாக்கில் நன்கு விளங்கும்.

துணிப்படு முடையுஞ் சுண்ணவெண் ணீறுந்
தோற்றமுஞ் சிந்தித்துக் காணில்
மணிப்படு கண்டனை வாயினுற் கூறி
மனத்தினுற் ருெண்டனே னினைவேன்
பணிப்படு மரவம் பற்றிய கையர்
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பிணிப்பட வாண்டு பணிப்பில ராகி
லிவரலா தில்லையோ பிரானுர்.
சுந்தரர்-திருப்பாச்சிலாச்சிரமம்

† கண்ணி றைந்த கனபவ ளத்திரள்
விண்ணி றைந்த விரிசுடர்ச் சோதியான்
உண்ணி றைந்துரு வாயுயி ராயவன்
எண்ணி றைந்த வெறும்பியூ ரீசனே.
திருவெறும்பியூர்-திருக்குறுந்தொகை 9

‡ காமியஞ் செய்து காலங் கழியாதே
ஓமியஞ் செய்தங் குள்ளத் துணர்மினே
சாமி யோடு சரச்சுவ தியவள்
கோமி யும்முறை யுங்குட மூக்கிலே.
திருக்குடமூக்கு - திருக்குறுந்தொகை 8.

3. அப்பரின் முக வசீகரணம்

சேக்கிழார், அப்பர் திருமுகத்தின் அழகும் அதன் வசீகரமும் மிகவும் அற்புதமாக விளக்குகின்ருர். நீற்றறையிலிட்ட திருநாவுக்கரசு எவ்வாருனுரென்று காண ஒரு வாரம் கழித்து அவ்வறையைத் திறந்த போது,

ஆனந்த வெள்ளத்தி னிடைமூழ்கி யம்பலவர்
தேனுந்து மலர்ப்பாதத் தமுதுண்டு தெளிவெய்தி
யூனந்தா னிலராகி யுவந்திருந்தார் தம்மைக்கண்
டீனந்தங் கியதிலதா மென்னவதி சயமென்ருர்
திருநின்ற சருக்கம் 101.

பின்னர் அப்பர் திருவதிகைக்குத் திருப்பாதிப்புலியூரினின்று மீண்டபோது அவ்வூரார் விழாக்கொண்டாடத் திருநாவுக்கரசர் ஊர்வலம் வரும்போது அப்பர் நிலையும் அவ்வூரார் கூற்றும் சேக்கிழார் மிகவழகாய் வர்ணிப்பது காண்க:—

தூயவெண்ணீ றுதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும்
நாயகன்சேவடி தைவருஞ் சிந்தையுநைந் துநைந் துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழிகண்ணும் பதிகச்செஞ்சொன்
மேய செவ்வாயுமுடையார் புகுந்தனர் வீதியுள்ளே.

கண்டார்கள் கைதலைமேற் குவித்திந்தக் கருணைகண்டால்
மிண்டாய செய்கை யமண்கையர் தீங்குவிளைக்கச்செற்ற
மூண்டாய வண்ணமெவ் வண்ணமென் றுரைப்பார்கள் பின்னும்
தொண்டாண்டு கொண்டபிரானைத் தொழுது துதித்தனரே.

இவ்வண்ணம் போலவெனைப் பலமாக்க ளியம்பியேத்த
மெய்வண்ண நீற்றொளிமேவும் குழாங்கள் விரவிச்செல்ல
வவ்வண்ண நண்ணிய வன்பரும் வந்தெய்தி யம்பவளச்
செவ்வண்ணர் கோயிற் றிருவீரட்டானத்தைச்சேர்ந்தனரே.
திருநாவுக்கரசு நாயனுர் புராணம் 142.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[193-வது பக்கத் தொடர்ச்சி]

(புலன்கள் - Perception)

மூக்கு—நாற்றம்

முகர்தலால் விளங்கும் நாற்றப்புலனுக் கேற்ற பொறி மூக்கேயாம். உயிர்ப்போடு தொடர்புபட்டிருப்பதால் உயிர்ப்பென்றும்இப்புலனை வழங்குவர்."கண்டு கேட் டுண்டுயிர்த் துற்று அறியும் ஐம்புல இன்பம்" என வருதல் காண்க. இதற்குப் புகுவாயோ சில கருவைப்புகளே யாகும் (Cells). அவை மூக்கினுள்ளமைந்த கோழைத் தோலிலே (Mucous membrane) பொதிந்துள்ளன. அவை வடிவில் வடிக்கதிர் (Spindle) போன்று விளங்குவன. ஒவ்வொரு கருவைப்பும் மூக்குநரம்பிலிருந்து வரும் ஒவ்வொரு நாரோடு தொடர்புண்டு கிடக்கின்றது. மக்களிடை இப்புலன் சிறப்புநிலையுற்று விளங்கவில்லை. நாயும் எலியும் மோப்பம்பிடிப்பதில் தலை சிறந்தன. அவற்றிற்கு மக்கள் அவ்வழியில் தோற்றுப்போகின்றனர். உணவுப் பொருள்களைத் தெரிந்தெடுப்பதற்குப் பயன்படுவதாதலின் வாய்க்கருகே இந்தப் பொறியும் இடம் பெற்றது. மோப்பத்தினுலேயே ஒக்காளப் பொருள்களை அறிகிருேம். மக்கள் உயர்நிலை யடையஅடைய இப்புலன் தன் பெருமையை இழந்துவருகிறது என்ருலும், தலையில் முதல்முதல் பிரிந்த நரம்பு, இப்புல நரம்பே என்பதை நாம் மறத்தலாகாது. கருவிலே திருவருளுடைய பெரும் பாவாணர்கள் தமது புனைந்துரையில் இப்புலனை நினைப்பூட்டியே நம்மை இனிமை கெழுமிய இன்பஉலகிற் கொண்டுசெல்கின்றனர். இந்த நுணுக்கத்தைக் கற்றுக்குட்டிகள் உணர்வதில்லை'.

உயிர்ப்பொருள்கள் உயிரல்பொருள்கள் என்றவற்றிலிருந்தும் எழும் நுண்பொடிகள் காற்றிற் பரவுகின்றன. அவை தொலைவிலும் சென்று சிலபோது பரவுகின்றன. இவ்வாறு பரவியவை நாம் உயிர்க்கும்போது நம் மூக்கினுட் புகுந்து கோழைத்தோலில் புதைந்துள்ள கருவைப்புக்களைத் தாக்குகின்றன. அதனுல் அவை கிளர்ச்சியுறுகின்றன. நரம்புநார் வழியாக இக்கிளர்ச்சி மூளையில் உள்ள நாற்றப்புல எல்லையை அடைகின்றது. எனவே, இவ்வாறு பரவிய நுண்பொடிகளே தூண்டல்களாகும்.

முகரும்பொறி சிக்கலின்றி இருந்தாலும் நாற்றப்புலனின் வகையோ பலவாகவே தோன்றுகின்றது. நிறவகை ஒலிவகை முதலியபோல, நாற்றவகைகள் ஒற்றுமைபட்டு ஒருதொடர்ச்சியாக விளங்கவில்லை. நாற்றப்புலன் மக்களிடை சிறந்து விளங்காமையால் அதைப்பற்றி ஆராய்வோரும் அதன் வேற்றுமைகளை வகைசெய்து இதுவரை முடிவுகட்டவில்லை. புதுப்புது மருந்துகளும், புதுப்புதுப் பழங்களும், பூக்களும் புதுப்புது மணத்தைத் தெரிவிக்கின்றன. எனினும் நாற்றத்தை ஒன்பது இனங்களாகப் பிரித்து வைத்துள்ளார்கள் ஆராய்ச்சிவாணர்.

1. பழ நாற்றம் (Ethereal)
2. கறி நாற்றம் (Aromatic) (வான்மிளகு, சூடன் முதலிய மரப்பொருள்களின் நாற்றம்)
3. பூ நாற்றம் (Fregrant)
4. ஓர்க்கோலை நாற்றம் (Ambrosiac) (ஓர்க்கோலை amber கஸ்தூரி புனுகு கோரோசனை முதலியவற்றின் மணம்)
5. உள்ளி நாற்றம் (Allicaceous) (பெருங்காயம், வெங்காயம் வெள்ளைப்பூண்டு முதலியவற்றின் மணம்)
6. சுடுநாற்றம் (Empyreumatic) (தீய்ந்தபொருள்கள் புகையிலைப்புகை முதலியவற்றின் மணம்)
7. முடை நாற்றம் (Hircine) வேர்வை தயிர் முதலியவற்றின் நாற்றம்

8. நஞ்சு நாற்றம் (அபினி முதலியவற்றின் நாற்றம்)
9. எரு நாற்றம் (பவ்வீ அழுகும்பொருள் இவற்றின் நாற்றம்)

இந் நாற்றப்புலனது உரமோ தனித்தனித் தூண்டல்களின் உரத்தைப் பொருத்ததன்று. பலபொடிகள் வந்து தாக்கினல் உரமான நாற்றம் எழுகின்றது; மிக்க மணம் வீசுகின்றது, பல செம்புகளைக் கொண்டு அதில் ஒன்றில் ஒரு துளியும் மற்றென்றில் இரண்டு துளியும், மற்றையவற்றில் இவ்வாறே ஒவ்வொரு துளியாக மிகுதிப் படுத்திக்கொண்டே போய் நாற்றப் பொருளைத் தண்ணீரில் கலந்து வைப்போமானல், நாற்றப்பொருள் குறைந்துள்ள செம்பிலிருந்துவரும் நாற்றம் குறைவாகவும் மிக்குள்ள செம்பிலிருந்து வரும் நாற்றம் மிகுதியாகவும் காணப்படும். எவ்வளவு குறைவாகப் பொடிகள் இருந்தால் நாற்றம் எழக்கூடும்! பொருளுக்குப் பொருள் இவ்வளவு மாறுபடுகின்றது. ஆதலால் ஒரு சொல்லில் இக் கேள்விக்கு விடையளிக்க இயலாது.

மேல் காட்டியபடி 9 இனமாக வகுப்பதே யல்லாமல் வேறு பல வகையாகவும் நாற்றப்புலனை வகுப்பதும் உண்டு. நெடிநாற்றம் என்பது உண்மையில் நாற்றப்புலன் அன்று, நெடி எடுத்தபோது மூக்கு எரிகின்றது. இதனலேயே அஃதொரு ஊற்றுப்புலன் என்பது விளங்கவில்லையா?

வாய்—சுவைப்புலன்

நாற்றப்புலனில் அண்ணனே சுவைப்புலனகும். உணவைத் தேர்ந்தெடுப்பதற்கு உதவுவன இவை இரண்டுமே யன்றே? இவையிரண்டும் தொடக்கத்தில் உணவுப்புலன் அல்லது மருந்துப்புலன் என ஒன்றுகவே விளங்கின. நாற்றப்புலனை எழுப்பும் பொருள்கள் தொலைவில் இருக்கலாம்; சுவைப்புலனை எழுப்புவனவோ, நாக்கில் கரைதல் வேண்டும். தொலைவில் நாற்றப்புலனும் அருகில் சுவைப்புலனும் இயங்கி வேறுபிரிந்து உயிர்க்கு உணவை ஊட்டி வளர்த்து வருகின்றன.

இப்புலனுக்குப் புகுவாயாக அமைந்தனவும் சில கருவைப்புக்களேயாம். அவை, சிறு குட்டவடிவினவாகவும் குழைவடிவினவாகவும் விளங்குகின்றன. இவை நாக்கிலும் அண்ணத்திலும் கிடக்கும் ஈழைத்தோலினுள் புதைந்துள்ளன. இவற்றின் கழுத்து குவிந்து மேலுள்ளது. அக்கழுத்தே தாக்கப்படுகின்றது. தூண்டற்பொருள்கள் நீர்ப்பொருள்களாகவே விளங்குதல் வேண்டும். கெட்டிப்பொருள்களும் உமிழ்நீரில் கரைந்து நீரானபோதுதான் சுவைக்கப்படுகின்றன. மூன்று தலைநரம்புகளிலிருந்து நார்கள் ஓடிவந்து நாக்கின் பலவிடத்திலுமுள்ள இக்கருவைப்புக்களைச் சேர்கின்றன. இந் நரம்புகள்வழியாகக் கிளர்ச்சி மூளையிலுள்ள சுவைப்புல எல்லையைச் சேர்கின்றது.

சுவைப்புலனுக்கும் நாற்றப்புலனுக்கும் உள்ள ஒற்றுமையை மேலேயே குறித்தோம். இவற்றைப் பற்றிய பொறிகள் அடுத்தடுத்து விளங்குவதால் நாற்றத்தைச் சுவையாக வழங்கும் மயக்கவுணர்வு எழுகின்றது. நாம் உண்ணும் உணவுகள் பல நறுமணங் கமழும் பொருள்களேயாம். வாயிலிட்டபோது அவ்வுணவின் மணம் மூக்கிற் கெட்டுகின்றது. அதனல் அம்மணத்தைச் சுவையென்றே எண்ணி ஏமாறுகின்றேம். மூக்கை மூடிக்கொண்டால் பல பொருள்களின் இனிமையை அறியாது திகைப்போம். கண்ணையும் மூக்கையும் மூடிக்கொண்டிருப்பவனது இலையில் வெங்காயமும் உருளைக்கிழங்கும் படைப்போமானல், அவன் இரண்டின் சுவையையும் ஒன்றுகவே அறிவான். அவற்றின் வேற்றுமையை யறியான். உணவின் இனிமை என்பது, சுவையையும் நாற்றத்தையும் குறிப்பது காண்க. ஆராய்ச்சியாளர்கள் சுவைகளை நான்கு வகைகளாகப் பிரித்துள்ளார்கள்.

1. தித்திப்பு.
2. புளிப்பு.
3. உவர்ப்பு.
4. கைப்பு.

இரும்பு, பொன், முதலியவற்றை வாயிலிட்டால் ஒருவகையான சுவை எழுகிறது. அதனைப் பொற்சுவை என்பர் சிலர். துவர்ப்பு என்பதும் வேறொரு சுவை என்பர் சிலர். இவ்விரண்டும் தனிச் சுவைகள் அல்ல என்றும், மேற்கூறிய நான்கின் கலப்பே என்றும் பலர் கொள்கின்றனர். சூடான குடிநீரின் சுடுசுவையும், பனிப்பாற்கட்டியின் குளிர்சுவையும்சுடுபுலனும் குளிர்புலனுமேயன்றி உண்மையில் சுவைப் புலனல்ல. கார்ப்பு என்பதும் நெடிபோலத் தொடுபுலனேயாம். இந்நால்வகைச் சுவைப்புலனும் ஒலிவகையும் ஒளிவகையும்போல ஒற்றுமைப்படத் தொடர்ச்சியாவதில்லை.

தண்ணீரில் பொருளைக் கரைத்துவைத்து நாற்ற வேற்றுமை கண்டபோது சுவை வேற்றுமையும் காணலாம். இவ்வாறு பல செம்பில் உள்ளவற்றை, ஒன்றின்பின் ஒன்றுக நாக்கில் பூசிக்கொண்டே வரும்போது வேற்றுமை புலனுவதைக் குறித்துவைத்துக் கொள்ளலாம். எவ்வளவு குறைவாக இருந்தால் ஒரு பொருள் சுவைதரும் என்று ஆராய்ச்சி செய்தவர்கள் சுவைக்குத் தகுந்தபடி அளவு மாறுகிறது என்று கண்டனர். கைப்புப்பொருள் 3,90,000 பங்கு தண்ணீரில் ஒருபங்கு இருந்தாலும் புலனுகின்றது. உப்போ 2240 பங்கு தண்ணீரில் ஒருபங்கு இருந்தாலும் புலனுகின்றது. புளிப்போ 2080 பங்கு தண்ணீரில் ஒருபங்கு இருந்தால் புலனுகின்றது. இனிப்போ 199 பங்கு தண்ணீரில் ஒருபங்கு இருந்தாலும் புலனுகின்றது.

இச்சுவைகளின் வகையினை அறிவதற்குப் புகுவாய்களும் வெவ்வேறமைந்துள்ளன எனச் சிலர் எடுத்துக் காட்டுகின்றனர். கைப்புப்பொருளால் தாக்குண்ணும் புகுவாய்கள் நாக்கின் பின்புறத்தே பரந்து கிடக்கின்றனவாம். இனிப்புப் பொருளால் தாக்குண்பன நுனிநாவில் கிடக்கின்றனவாம்; மற்றவை, மற்றவிடத்தில் பரவிக் கிடக்கின்றனவாம்.

புலக்கலவை:—இவ்வாறு புலன்கள் பலவகையாக இருந்தாலும் இவற்றை இங்ஙனம் தனித்தனியே நாம் உணர்வதில்லை. குறித்த ஒரு நனவுப்பொழுதில் பல புலன்கள் இயைந்து ஒரு புலன்போல் தோன்றுகின்றன. அவ்வாறு தோன்றும் ஒற்றுமைக் காட்சியைத் தீநீர் கொண்டு முன்னர் விளக்கினேம். கலவைப்புலன் என அவ்வொற்றுமை யியக்கத்தை வழங்கலாம். இப்புலக்கலவை எங்கெழுகின்றது. நரம்புகள் ஒன்றேடொன்று இயைகின்றனவா? அவ்வாறு கூறுதற்கிடமில்லை. இவையனைத்தும் ஒன்றுகும் புலக்கலவைப் பொறி (Sensorium Commune) ஒன்று உண்டென்றனர் ஒரு சிலர். உடல்நூலாராய்ச்சியாளர் இதுவரை அத்தகைய பொறியொன்றினைக் கண்டார் இல்லை. ஒரு புலநரம்பு, கிளர்ச்சியுற்றபோது மூளை முழுதும் கிளர்ச்சி பரவுகிறதென்றும் அதனல் இக் கலவை நேர்கிறதென்றும் சிலர் விளக்கினர். அவ்வாறு சொல்வதற்கும் இடமில்லை. அதனல், இக் கலவை உள்ளத்தின் செயலே எனச் சிலர் முடிவுகட்டுகின்றனர். உயிரே (Soul) இதனைக் கலந்து காண்கிறதென்பர் மக்கேல் என்ற பெரியார்.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 3. கைகேசி சூழ்வினைப் படலம்.

[195-வது பக்கத் தொடர்ச்சி]

ஊகமேனி லோன்றிக் காட்சியேனின் மாறல்

இவ்வண்ணம் இணையிலா உவகையோடு தம்மை எழில்கோலங் கண்டுகொண்ட அயோத்தி மைந்தரும் மாதராரும் வீதிவாய் வருதலுற்றுர். ஒரு பொருண்மேல் மனம்வைத்துக் குழுமிப மக்கள்தம் சிந்தைதான் செல்லுமொரு விந்தையை முன் கார்முகப்படலத்திற் காணலுற்றேம். இங்கு,

பாகியல் பவளச் செய்வாய்ப்
பணைமுலைப் பரவை யல்குல்
தோகையர் குழாமு மைந்தர்
சும்மையுந் துவன்றி யெங்கும்
ஏகுமி னேகு மென்றென்
றிடையிடை நிற்ற லல்லால்
போகில மீள கில்லாப்
பொன்னகர் வீதி யெல்லாம்

[பாகுபோன்று இளகிய இனிமையோடு பவளம்போன்ற நிறம் அமைந்த சிவந்த வாயையும், பருத்த முலைகளையும், பரந்த அல்குலையுமுடைய மயில்போன்ற மாதர் கூட்டமும் ஆடவர் கூட்டமும் நெருங்கி எங்கும், "செல்லுங்கள் செல்லுங்கள்" என்று உரப்பித் தாங்கள் நின்ற இடத்திலேயே நிற்பதல்லாமல், அந்த அழகிய நகரத்தின் தெருக்களில் எல்லாம் யாவரும் போனபாடுமில்லை போகவேண்டாவென மீண்டபாடுமில்லை]

வேந்தரே பெரிதென் பாரும்
வீரரே பெரிதென் பாரும்
மாந்தரே பெரிதென் பாரும்
மகளிரே பெரிதென் பாரும்
போந்ததே பெரிதென் பாரும்
புகுவதே பெரிதென் பாரும்
தேர்ந்ததே தேரி னல்லால்
யாவரே தெரியக் கண்டார்.

[அரசரே அதிகம் என்பாரும், போர்வீரரே அதிகம் என்பாரும், ஆடவர்களே அதிகம் என்பாரும், மாதர்களே அதிகம் என்பாரும் முன்சென்ற சனங்களே அதிகம் என்பாரும், இனிவரும் சனங்களே அதிகம் என்பாரும் ஆயினுர்—நோக்குங்கால், அவரவர் அறிந்தவரையில் அறிந்தபடியல்லாமல் முழுவதுந்தெரியக் கண்டவர் யாருளர்]

என்னும் இரண்டு பாசுரங்களிற் கம்பர், மக்கள்தொகை மனத்தின் வேறேர் தன்மையைச் சிறிது விளக்குகின்றார். முன் அவைக்களம் கொணரலாகும் அரன்வில்லை நோக்கிய மிதிலாநகரத்தவர், "கைதவம் தனுவெனல்" எனஆரம்பித்து, "விதிசெய்த தீமைதான்" என வம்பு வளர்த்து முடித்ததையும், பின் அவையின்கண் அக் கார்முகச் செய்தியைக் கண்ணுற்ற மாதரும்— "பிள்ளைமுன் இட்டது பேதைமை" எனத்துவக்கிப் "பீன தனத்தவள் பேறிலள்" என முடித்ததையும் கருத்துட்கொண்டு, தொக்கிருந்து விவகரிக்கும் மாநுட இயற்கையைக் கம்பர் ஓர்ந்துரைத்த நேர்மையை முன்னர் (வால்யூம் 2-பக்கங்கள், 334, 370) வரைந்துளோம். அங்குக் கார்முகத்தைக் கண்ணுறுங்கால் காட்சியளவில் வேறுபட வழியில்லை. ஆதலின் சனங்கள் எற்றுக்கிது கொணரலாயிற்றென ஊகிக்கத் தலைப்பட்டனர். அவ்வாறு [illegible] திலும் வகையிலும் ஒருவரை [illegible] முயன்றேரேனும் கருத்தினில் [illegible] வேறுபட்டிலர். "என்னிது கொணர்கென விளம்பினன்" என ஐயுற்றுன் ஒருவன்; "மன்னவர் உளர்கொலோ மதி கெட்டார்" என வினவினன் மற்றெருவன்; "நச்சிலை நங்கைமேல் நாட்டும் வேந்து" என முடித்தான் மூன்றுமவன். இப்படியே, "வெள்ளமணைத்தவன் வில்லையெடுத்து இப்பிள்ளைமுன் இட்டது பேதைமை" என்றுெருத்தியாக அயலவள், "கோனிவனிற் கொடியார் இலை" என வலித்தனள். இத்தனையும் அநுமானங்கள். "மாயவிற்குத் தோற்றவா" என மாழ்கிய அச் சனகன்பால் இத்தனை அநுமானங்களும் பொய்யென்பதற்கும் ஐயமில்லை. ஆயினும் அனைவரும் ஒருமனதாய் ஒவ்வினர். இதுவே மாநுட இயற்கை. அநுமானப் பிரமாணத்தால் எய்தரிற்குமோர் முடிவிற்குப் பொதுஜனங்கள் எளிதில் ஒவ்வுவர். ஒவ்வாரெனின் அந்த அநுமானஞ் செய்யுந் திறமையும் தமக்கில்லை என்று பிறர் எண்ணிவிடுவார்களோ என்னும் மானமே இவ்வண்ணம் ஒவ்வுதற்குப் பெரும்பான்மை காரணமென்னலாம். ஆகாயத்தில் அறுபதுகோடி நக்ஷத்திரங்கள் இருக்கலாம் என்று ஒருவர் கூறினல் மற்றவர் 'ஆம், ஆம், இருக்கலாம்' என்பர். "திருடினவன் இவனே என நிச்சயமாக ஊகிக்கின்றேன்" என்றெருவர் விளம்பியவுடன் அயலிருப்போர், "அதற்கென்ன சந்தேகம்" எனச் சாதிப்பர். பெரிதிலும் சிறிதிலும் மாநுடமனப்பெற்றி இதனை உற்றுநோக்கினல் உணர்ந்து கொள்ளலாம். எளிதில் மாறுபடற்குரியதாய அநுமானப் பிரமாணத்தில் இவ்வொற்றுமையின் விந்தை புலப்படுகின்றது. உரைத்ததே உரைப்பதல்லால் யாவரே உணர்ந்துரைத்தார்!

மற்றுக் காட்சிப்பிரமாணத்திலோ இதற்கு நேர் எதிராய செய்தி தோன்றி நிற்கின்றது. பிறர் ஊகித்ததை யெல்லாம் தம்முடைய ஊகமாகப் பாராட்டிக் கொள்ள விரைகின்ற மக்கள், தாம் கண்டதே தக்கதென்று நிலைநிற்பாரேயன்றிப் பிறருடைய காட்சியைப் பெரிதென மதிக்கமாட்டார். வேந்தரே பெரிதென்பாரோடு முரணி வீரரே பெரிதென்பார் பிறர். மாந்தரே பெரிதென்பார்க்கு எதிர் மகளிரே பெரிதென்பாருளர் போந்ததைக் கண்டாரொடு இகலி நிற்பர் புகுவதைக் காண்கின்றுர். வேந்தர் வீரர் மாந்தர் மகளிர் போந்தவர் புகுமவர் அனைவரையும் ஒருங்கே கண்டவர் ஒருவரும் இலர். எனினும் தாம்தாம் கண்டதே காட்சியெனக் கிளக்கின்றுர் ஒவ்வொருவரும் தேர்ந்ததே தேரினல்லால் யாவரே தெரியக் கண்டார்.

அநுமானத்திலும் காட்சியிலும் மக்கள் திறம் இவ்வாறுகச் செய்கையிலோ அவர் இயல்பு இருந்த வண்ணத்தை, "ஏகுமின் ஏகுமென்றென்று இடையிடை நிற்றலல்லாமல் போகில மீளகில்லா' ஒழுக்கத்தால் கம்பர் குறிக்கின்றுர். பொதுசன 'ஒழுக்கத்தில் எல்லாரும் எல்லாரையும் 'ஏகுமின் ஏகுமின்' எனத் தாம் இருந்த இடத்திலேயே இருந்துகொண்டு தூண்டுகின்றவராவர். தாம் மீள்வதற் கியலாமையின் மற்றவரை ஏகுமாறு ஏவவேண்டியிருக்கும் தந்திரம் இது. இப்படிக் கம்பர், மிதிலையில் ஒருபகுதியும் அயோத்தியில் ஒருபகுதியுமாய்ப் பொதுஜனஊக்கம் புகுந்துபாயும் நெறியினைத் தெரியவைத்த திறத்தை உணர [illegible]வதால் சுவையேயன்றி நம்முடைய செய் [illegible]புலப்படி செம்மை செய்துகொள்ளும் பயனும் எ[illegible] ராவோம்.

188909
சென்னை-600 005
3C
[illegible], N28KN
N31'4'11

நோயற்ற :: :: வாழ்வே | **ஆரோக்கிய வாழ்க்கைக்கேற்ற இரு அருமருந்துகள்** | குறைவற்ற : : செல்வம்

"ஸித்தகல்ப மகரத்துஜம்"

(ரிஜிஸ்டர்ட்)

தேகத்திலுள்ள கொடியவியாதிகளை நீக்கி இரத்தசுத்தி செய்து, நரம்புகளைப் பலப்படுத்தி மூளைக்கு ஞாபக சக்தியையும் தேகத்திற்குப் பலத்தையும் அளிப்பதில் இம் மருந்து ஒப்புயர்வற்றது. இவ்வரிய ஔஷதத்தின் பெருமையைப் போற்றாத வைத்தியர்களேயில்லை. தேக ஆரோக்கியத்தைப் பெருக்கி வாழ்நாட்களை வளரச்செய்யும் சக்தி இம்மருந்தில் நன்கு அமைந்திருக்கிறது. ஒரு புட்டி மருந்தே தேகத்தை வலுப்படுத்தவும், ஜீவசக்தி, ஞாபக சக்தி பெறவும் போதுமானது. மூளையைக் கொண்டு பிழைப்பவர்களுக்கு இது ஓர் வரப்பிரஸாதம்.

60 மாத்திரைகள் கொண்ட புட்டி ரூபா **10**

"மஹா சந்தனாதித் தைலம்"

ஒப்புயர்வற்ற இத்தைலம் மூளைக்குப் பலத்தை அளித்து ஞாபக சக்தியை வளர்ப்பதிலும் நரையை நீக்கி, கூந்தலைக் கருமையாகவும் மழமழப்பாகவும் வளர்ச்சி செய்து அறிவையும் ஆற்றலையும் வளர்ப்பதில் பெயர்பெற்றது. கபால உஷ்ணம், மறதி மனச்சோர்வு, மயக்கம் மந்தப் பார்வை, தலைவலிபோன்ற நோய்களைப் போக்கி ஆனந்தத்தை அளிக்க வல்லது. மூளையைக் குளிர்ச்சி செய்து மனோரம்மியத்தை வளர்க்கும் இத்தைலம் ஆயிரக் கணக்கானவர்களால் போற்றப்பட்டது. ஒரு முறை உபயோகித்துப் பார்த்தால் இதன் அபாரசக்தியும் பெருமையும் நன்கு விளங்கும்.

1 மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய 12 அவுன்ஸ் புட்டி விலை ரூபா **5**.

உங்கள் நரம்புகளையும், தேகத்தையும் பலப்படுத்தவும், ஞாபக சக்தியைப் பெறவும், நோய்களிலிருந்துவிடுதலையடைந்து ஆரோக்கிய சுயராஜ்யத்தைப் பெறவும் சுலபமான வழி,

ஆயுர்வேத ரத்ன பண்டிட் டாக்டர் N. V. ஸ்ரீ ராமாசார்லு அவர்களின்

இணையற்ற ஔஷதங்களிலேயே இருக்கின்றது. அவைகளை உபயோகித்து இன்ப வாழ்வு நடத்தச் சிறிதுந் தயங்காதீர்கள்.

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட் சென்னை.

தபால் பெட்டி 151, சென்னை. கேட்லாக் இனாம். தந்தி விலாசம் 'கல்பம்' சென்னை.

மானேஜர்.—வி. ரகுபதி, B.A.B.L. ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.

இனாம்! இனாம்!!

வைத்திய வித்தியா

யௌவனம் என்னும்பொக்கிஷத்தையும்ஆரோக்கியமென்னும் குன்றாத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,
1/94, சைனா பஜார், மதராஸ்.

Estd. NATIONAL **1906**

INSURANCE COMPANY LIMITED.

Head Office:-**9, Old Court House St., Calcutta.**

Before taking out a life assurance policy it is better to apply all the rigid tests for a good company.

The "National" will surpass any other Company in these tests.

(1) Indian Capital-Indian Management-for the benefit of Indians.
(2) The Company has never contested a claim on a technicality.
(3) The low safe rates of premium provide maximum assurance at minimum cost.

The "National" keeps well ahead of the times and its policy of 'fair and square dealing' which began with its founding, ever since 1906, has been continuous.

For Particulars & Agency terms:
Apply to:— R. G. DAS & CO., *Managers.*
T. ANANTACHARI, B.A.,
Branch Secretary.

NATIONAL INSURANCE COMPANY LTD.,
Madras Branch, 113, Armenian Street,
G. T., Madras.

விஜய ரக்ஷித கவசம்.

இது ஓர் மஹானின் மந்திர உபதேசத்தினாலும், ஓர் அபூர்வ மூலிகையினாலும் தயாரிக்கப் படுகிறது. இதை அணிபவர்கள் கிரகதோஷம் முதலிய பல துன்பங்களிலிருந்து விடுபடுவதும் தவிர, எவ்வித காரியங்களிலும் வெற்றியடைந்து, ஆரோக்யம், சந்தானம், ஐஸ்வர்யம், தெய்வானுக்கிரகம், மனநிம்மதி இவைகளைப் பெறுகிறார்களென்பதை அனுபவத்தாலறியலாம். வெள்ளிக் கவசம் ரூ. 5. தங்கம் ரூ. 15.

விலாசம்:—புரபசர். கா. கோவிந்தாச்சார்,
மெஜிஷன் &மெஸ் மெரிஸ்ட், 218, தங்கசாலை, மதராஸ்.

- நவீன பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

மூன்றாவது ஆண்டு
நடக்கின்றது.

உள் நாடு வருட சந்தா	ரூ. **2 0 0**
வெளி நாடு ,,	ரூ. **2 8 0**

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணா 5 வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசிய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. சுப்ரமணியம்.

விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

— லோத்ரா —

ஸ்திரீகளுக்கு
மகிழ்ச்சியையும்
ஆரோக்கியத்தையும் தரும்.

— அம்ருதா —

இரத்தத்தைச் சுத்தி செய்யும்.

— அர்கா —

ஜுரத்தைப் போக்கும்

எல்லா மருந்துக்கடைகளிலும் கிடைக்கும்.

கேசரி குடீரம்

இந்திய கெமிஸ்ட் & டிரக்கிஸ்டு.

எழும்பூர். :: :: சென்னை.

அசோகா சால்ட்

(ரிஜிஸ்டர்ட்)

(அசோகா உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வாராமல் தடுக்கவும் அசோகா உப்பு ஓர் அரிய மருந்து.

உணவை நன்றாகச் செரிக்கச்செய்து யாதொரு வருத்தமின்றி நாள்தோறும் மலத்தைக்கழிக்கும் சிறந்த குணமுடையது.

அஜீர்ணம், பித்தவாயு, புளி ஏப்பம், குலை எரிச்சல், வயிற்றுவலி, குன்மம், மார்புவலி, இடுப்புநோய், தலைமயக்கம் முதலிய நோய்களை நீக்க வல்லது. பாண்டு, சோகை, காமாலை, ஜுரம், மகோதரம், அஜீர்ணம், பேதி, கணைச்சூடு, வெட்டைச்சூடு, மூலம், கரப்பான், சிரங்கு, குடல் கிருமி, மலச்சிக்கல், போன்ற நோய்களைப்போக்கி எவ்விதப் பிணியும் அணுகாமல் காக்கக் கூடியது அசோகா உப்பே யாகும்.

விலை ரூ **1-8-0** தபால்செலவு வேறு.

அசோகா கம்பெனி,
லிமிடெட், சென்னை.

பி. வி. ராஜன் பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம் வாசனைகளால் மேன்மையுற்றது. நெ. 1 ஸ்பெஷல் ரகம் பொடி-வீசை ரூ-4. ஷை சாதா ரகம்பொடி வீசை ரூபா 3½. டாக்டர் B. S. மல்லையா M.B., & C.M., & M.L.C. அவர்கள் பரிசோதித்த R.S. சுகந்த மூக்குத்தூள் விலை பாட்டில் 1-க்குஅணா 4. டஜன் ரூபா 2¼ ஷை ஒரு சேர் டின் ரூபா 1¾ வி பி. ரயில் சார்ஜ் வேறு.

பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,
நெ.44 கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.
தந்தி விலாசம் "நஸ்யம்"

கலா நிலயம்

1930 ஆண்டு பைண்ட் வால்யூம் மிகச் சிலவே இருக்கின்றன.

1928-வது ஆண்டு இதழ்களை வாங்குவார்க்கன்றி 1929 ஆண்டு இதழ்கள் மாத்திரம் கொடுப்பதற்கியலாது. அவைகளும், இன்னும் பத்துப் புத்தகங்களே இருக்கின்றன. வேண்டுவோர் விரைவின் வருக.

விலை:—(தபால் செலவு உள்பட) வால்யூம் ஒன்றிற்கு.

	உள்நாடு	வெளிநாடு
பைண்ட் செய்யாதது	ரூ. 8-0-0	ரூ. 9-8-0
காலிகோ கில்ட்	9-8-0	11-0-0
ஆப்லெதர் கில்ட்	10-0-0	11-8-0

முன் பணம் அனுப்புவதே உத்தமம்.

கலாநிலயம் ஆபீஸ்—புரசைபாக்கம், சென்னை.

33 வருஷங்களாக உலகப்பிரசித்தி பெற்றுவரும்

வைத்ய ரத்ன பண்டிட் D. கோபாலாசார்லு அவர்களின்

ஜீவாமிருதம் (ரிஜிஸ்டர்ட்)

இதைத் தினந்தோறும் போஜனத்தின் பின் இரண்டுதரம், முறைப்படி சாப்பிட்டுவந்தால், பலஹீனம், மலபந்தம், தலைவலி, நரம்புத்தளர்ச்சி, ரத்தமின்மை, ரக்த சோகை, அஜீர்ணம், ஆயாசம், மனச்சோர்வு, ஞாபகமின்மை, தூக்கமின்மை, பசியின்மை முதலியவைகளைப் போக்கி, சரீரத்தில் மிகுந்த சுத்த ரத்த ஓட்டத்தையும், மிகுந்த வலிவையும், நிறைந்த ஆரோக்கியத்தையுங் கொடுத்து வாழ்க்கையை இன்பமுறச் செய்வதுடன் நரம்புகளை வலுப்படுத்தி, வீர்யத்தை பெருகச் செய்கின்றது.

கேட்லாக் இனாம்.] விலை புட்டி 1-க்கு ரூ. 3-4-0. எல்லாவிடங்களிலும் கிடைக்கும். [ஏஜண்டுகள் தேவை.

ஆயுர்வேதாஸ்ரமம், 151, கோவிந்தப்பநாய்க்கன் வீதி, தபால் பெட்டி நெ. 287, மதராஸ்.

(1898-ல் ஸ்தாபிக்கப்பட்டது.)

டெலிபோன் நெ. 2191. தந்தி விலாசம், "பண்டிட்"

அருமையான பொடி! 32 தங்கமெடல்கள் பரிசுபெற்ற உடனே ஆர்டர் செய்யுங்கள்!!

பட்டணம் பொடிக்களஞ்சியம் பட்டணம்பொடி

காரம், மணம், குணம், சுகம், நிறம், வாடை இவை ஆறும் அமைந்துள்ளது.
விலை விபரத்திற்கு எழுதுக.

பட்டணம் பொடிக்களஞ்சியம்,
147, கோவிந்தப்ப நாயகன் தெரு, மதராஸ்.
புரோப்ரைடர்:— ஷண்முக முதலியார் பௌத்திரர்,
R. K. ஜெயராம் முதலியார்.
தபால் பெட்டி, நெ:—156

எச்சரிக்கை

எங்கள் பேடண்டு உரிமை அபகரித்தவர்களிருவர் நஷ்டம் கட்டிக்கொடுத்தனர். அனுப்புப் பாளையம் K. R. குழந்தைவேலு செட்டியார் நம்முடைய

ருக்மணி குக்கர்

அடுக்கைப் போலவே செய்து மஹா லக்ஷ்மி குக்கர் என்று பெயர்சூட்டித் திருச்சிராப்பள்ளியில் தம் ஏஜண்டு பித்தளை சாமான் வியாபாரி S. T. S கோவிந்தசெட்டியார் மூலமாய்ப் போலி குக்கர்களை விற்றதினால் அவர்களிருவர்பேரிலும் நாம் வழக்குத் தொடர்ந்தோம். திருச்சிராப்பள்ளி ஜில்லா ஜட்ஜ் விசாரணையில் இவர்கள் இனிமேல் எங்கள் Patent No. 4907 of 1919. உரிமையை அபகரிக்கும்படியாய், குக்கர் செய்யவாவது விற்கவாவது கூடாதென்றும் நமக்கு இதன்மூலம் நேர்ந்த நஷ்டத்தைக் கோர்ட்டு செலவுடன் இறுக்க வேண்டுமென்றும் தீர்ப்புச்செய்தனர். ருக்மணி குக்கரைப்போல் யாவரும் சொந்த உபயோகத்திற்காவது விற்பனைக்காவது செய்யக்கூடாது; போலி குக்கர்களை விற்கவும் கூடாது வாங்கவும் கூடாது என்று இதனால் தெரிவிக்கிறோம்.

ருக்மணி குக்கர் கம்பெனி,
இராயபுரம், சென்னைப்பட்டினம்.

நம்பிக்கையுள்ள — — ஔஷதம்

அஜீரணம், மலச்சிக்கல், தேக அசதி, ஞாபகக்குறைவு, நரம்புகளின் தளர்ச்சி முதலிய வியாதிகளுக்கு எங்கள்

ஆதங்க நிக்ரஹ
மாத்திரைகள்

நம்பிக்கையுள்ள ஔஷதம். ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துக் குணத்தை யடைந்திருக்கிறார்கள். நீங்களும் உபயோகித்துக் குணத்தை யடையுங்கள்.

32-மாத்திரைகளடங்கிய
டப்பி 1-க்கு விலை ரூ. 1

கேட்லாக் இனாம்!

ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்,
26, பிராட்வே,
சென்னை.

வித்வான் த. சண்முக கவிராயரின்
:: மகா பாரதம் தமிழ் வசனம் ::
திருத்தமான உயர்ந்த பதிப்பு
[illegible] கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு [illegible] செய்யப்பட்டிருக்கிறது.
(1) [illegible] ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் [illegible] ரூ. [illegible] மற்ற பர்வம் அச்சில்.
பாலவிநோதினி ஆபீஸ், 328, தண்டையார்ப்பேட்டை, [illegible] போஸ்ட், மதராஸ்.

உயர்ந்ததும், சிறந்ததுமான மூக்குக் கண்ணாடிகள் வாங்குவதற்கு உத்தரவாத முள்ள இடம்இதுவே. விலைகள் சரசம், புதுமாதிரியான கண்ணாடிகள் எப்பொழுதும் கைவசமிருக்கின்றன. மாணவர்களுக்கு ஸ்பெஷல் கமிஷன் கொடுக்கப்படும். விலை விபரத்திற்கு எழுதுக.

எம். ஏ. சாரி அண்டு கோ., மூக்குக்கண்ணாடி வியாபாரிகள், நெ. 9, பிராட்வே, சென்னை.

வர்த்தமானம்

காந்தி இர்வின் உடன்படிக்கை:—சென்ற வாரம் வியாழக்கிழமை லண்டன் பார்லிமெண்டு காமன் சபையில் இந்திய விவாதத்தை மிஸ்டர் பால்ட்வின் ஆரம்பம் செய்துவைத்தார். அவர் தனது உபன்யாசத்தில் காந்தி இர்வின் சம்பாஷணையைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொன்னார். அதாவது, காந்தி இர்வின் சம்பாஷணையின் முடிவைப் பற்றிப் பல பத்திரிகைகள் பலவாறாகச் சொல்லுகின்றன. சில பத்திரிகைகள் இர்வின் பிரபு காந்திக்குச் சரணாகதி யடைந்துவிட்டாரென்றும், வேறு சில பத்திரிகைகள் திரு. காந்தி தன் கொள்கைகளை விட்டுக்கொடுத்து விட்டார் என்றும் சொல்லுவதை நான் பலமாகக் கண்டிக்கின்றேன். இச்சமரச முடிவில் ஒருவருக்கும் வெற்றியும் இல்லை, தோல்வியுமில்லை.

பிறகு இந்தியா மந்திரி பென் பேசினார். அவர் தற்பொழுது வைசிராய்மூலமாகக் காங்கிரசுக்கும் கவர்ன்மெண்டாருக்கும் ஏற்பட்டிருக்கும் மகத்தான சமரசத்தை வரவேற்பதாகச் சொல்லிவிட்டு மேலும் சொன்னதாவது:—

‘சமீபத்தில் நடந்த இர்வின், காந்தி சம்பாஷணையின் முடிவை நாம் வரவேற்கிறோம். அதனால் உண்டாயிருக்கிற நன்மைகள் எண்ணிறந்தன. இந்த உடன்படிக்கையை இந்தியர் யாவரும் ஒருமனதாக ஆதரிக்கின்றார். இச்சமாதான உடன்படிக்கையால் லண்டனில் தீர்க்க முடியாத அநேக விஷயங்களையும் தீர்ப்பது சாத்தியமாகிவிட்டது மேலும் இப்பொழுது சட்டமறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டிருந்ததற்காகச் சிறைகளில் அடைபட்டிருந்தவர்களை வெளியில்விட்டுச் சிறையைக் காலிசெய்வது சாத்தியமாயிற்று. சட்டமறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றவர்கள் தேசத்தினிடத்திலுள்ள அன்பினால் நாம் விரும்பாத வழியில் நடந்துகொண்டார்கள். இப்பொழுது அவர்கள் சுயேச்சை உடையவர்களாக இருக்கிறார்கள். இச் சமரஸத்தினால் நாம் உலகத்தின் நல்ல அபிப்பிராயத்தையும் சம்பாதித்துக் கொண்டோம். எப்பொழுதும் உலகத்தின் மனோபாவத்திற்கு விரோதமாகச் செல்லலாகாது. லார்ட் இர்வினுக்கும் மகாத்மா காந்திக்கும் உடன்படிக்கை ஏற்பட்டதை உலகமெல்லாம் முக்கியமாக அமெரிக்கரும் நியூஸிலந்து கவர்ன்மெண்டாரும் பாராட்டுகின்றனர். இந்தச் சமரசத்தினால் இந்தியாவின் நல்லெண்ணத்தையும் உலகத்தின் மதிப்பையும் பெற்றோம்’ இவர் பேசியபிறகு ஸர். ராபர்ட் ஹாமில்டனும் எர்ல் விண்டர்டனும் இந்திய நிலைமையைப் பற்றிச் சிறிது நேரம் பேசினார்கள்.

முடிவில் பிரதமமந்திரி மிஸ்டர் ராம்சே மாக்டொனால்டு முன் பேசினவர்களின் கருத்துக்களை எடுத்துச் சொல்லிவிட்டு மேலும் பேசினதாவது,

இப்பொழுது கீழ்த்திசையில் அதாவது இந்தியாவில் நாளுக்குநாள் மாறுதல்கள் ஏற்பட்டுவருகின்றன. இவற்றைப் பார்த்துக்கொண்டு நாம் சும்மா இருக்க முடியாது. வட்டமேஜை மகாநாட்டை நாங்கள் நடத்திச் செல்லுவதற்குப் பிரயாசைப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். மேலும் இதுவரையில் கூறியிருப்பதற் கப்பால் வேறொன்றும் கூறப்போவதில்லை என்றும் சொல்லமுடியாது. காலசக்கரம் விரைவாகச் சுழன்றுவருவதால் காலாகாலத்தில் அதைக் கவனித்துக் கவிழ்ந்து போகுமுன் தேவையான மாறுதல்களுடன் நமது நிலைமையைச் சரிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

இப்பொழுது இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் ராஜீய நெருக்கடிகள் நமக்கு ஒரு பரீட்சையேயாகும். இவ்விதமான நெருக்கடியான நிலைமையில் நாம் எப்படிச் சமாளித்துக் கொள்ளுகின்றோம் என்பதை உலகம் அறிந்துகொள்ளும். இத்தகைய [illegible] நிலைமை இதுவரை எந்தக் [illegible] லும் ஏற்பட்டதில்லை என்று சொல்லலாம்.’

இரண்டாவது தடவையாக இங்கே நடக்கப் போகிற வட்டமேஜை மகாநாட்டிற்கு திரு காந்தியும் காங்கிரஸ் பிரதிநிதிகளும் வருவார்கள் என்று நம்பம்படுகிறது.

———

“மிஸ்டர் காந்தியுடன் நான் செய்த சம்பாஷணை முழுவதிலும் அவரது வார்த்தையை நான் பூர்ணமாக நம்பலாமென்ற உறுதி எனக்கு ஏற்பட்டது. வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் கண்டுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றி வைக்க அவர் தம்மால் இயன்றதை எல்லாம் செய்வாரென்று நான் நம்புகின்றேன். இரண்டு பெரிய தேசங்களுக்குள் கௌரவமான சமரசத்தைத் திரும்ப ஏற்படுத்துவதற்குப் பேருதவியாக இருக்கும் பலன் கிடைக்கவிருக்கையில் என் சக்திக்குட்பட்ட எந்த முயற்சியைச் செய்வதும் பெரிதாகு மென்ற சந்தேகம் எனக்கு ஒரு போதும் ஏற்பட்டதில்லை. நானும் மிஸ்டர் காந்தியும் செய்த சம்பாஷணையால் ஏற்பட்ட முடிவானது இந்தியாவிலுள்ள ஒவ்வொரு ஜாதியாராலும் வகுப்பாராலும் மதத்தாராலும் திருப்தியுடனும் சந்தோஷத்துடனும் வரவேற்கப்படுவதை நினைத்துப் பார்க்கும் பொழுது எனக்குச் சந்தோஷமுண்டாகின்றது” என்று அரசப் பிரதிநிதி இர்வின் பிரபு ஜெயப்பூரில் பேசினார்.

***

சென்னை ஹோம் மெம்பர் ஸர் மகமத் உஸ்மான் அவர்களது உத்தியோககாலம் மறுபடியும் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றதென்று தெரியவருகிறது.

***

1921-ஆம் வருடம் எடுத்த கணக்கின்படி இந்தியாவின் ஜனத்தொகை 33 கோடி. இப்பொழுது எடுத்த கணக்கின்படி, 35 கோடியே 15 லக்ஷம் எனத் தெரிகின்றது.

***

வியன்னாவில், ஸர்விட்டல்பாய் படேல்:—வியன்னாவில் பல பத்திரிகை நிருபர்களுக்கு இந்தியச் சட்டசபையின் மாஜித்தலைவரான ஸ்ரீமான் விட்டல்பாய் படேல் பேட்டிகொடுத்தபோது இங்கிலாந்துடன் மகாநாட்டில் கலந்துகொள்ளுவதால் இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து கிடைக்குமென்று தாம் நம்பவில்லை யென்று சொன்னார். ராணுவம் வரவு செலவு இவைகளின் மீது ஆதிக்கத்துடன் சரிசமத்துவமான அந்தஸ்தையே இந்தியா விரும்புகிறதென்றும் இந்தியா குடியேற்ற நாட்டு அந்தஸ்தை ஒப்புக் கொண்டாலும் இங்கிலாந்துடனுள்ள சம்பந்தத்தை எந்தச் சமயத்திலும் அறுத்துக்கொண்டுவிட அது சுதந்திரம் வைத்துக்கொள்ளு மென்றும் சொன்னார் என்று ஒரு வியன்னாச் செய்தி கூறுகிறது.

***

ஞானமொழிகள்:-மொர்வியிங் கவர்ன்மெண்ட் ஹாஸ்பிடலில் உத்தியோகமாயிருக்கும் டாக்டர் N. S. நாதர் என்பவர் வரைந்துள ஞானமொழிகள் அடங்கிய சிறு புத்தகம் ஒன்று எமது பார்வைக்கு வரப்பெற்றோம். உலகத்தின்பால் உள்ளன்போடு உரைக்கும் இம்மொழிகளிற் பல உட்கொள்ளத்தக்கன. “ஒரு விநாடியேனும் இருதயம் நின்றால் வாழ்வு முடிந்துவிடும்; அதுபோல் ஒரு தேசத்தில் ஒரு சமுகத்தில், அல்லது தனிவாழ்வில் தெய்வபக்தி எப்பொழுது அகன்றதோ, அப்பொழுதே மரணபங்க மேற்பட்டு விட்டதென்பது நிச்சயம்” என்னும் இவ்வாக்கு இக்காலத்தில் எல்லோராலும் கருத்துடன் போற்றற்குரியது. அவ்வாறே, “பெண் சமுகத்திற்கு விடுதலை என்பது கற்பு’ என உரைக்கும் Dr N. S. [illegible]நாதர் அவர்கள், உண்மை ஆராய்ச்சி உடையவர் என்[illegible] ஐயமில்லை. இப்புத்தகத்தின் விலை. 20 காசு.

18909

KALANILAYAM.
REG. NO. M. 2324.

ஆயுர்வேத வித்வான் V. B. பண்டிட், சத் வைத்தியசாலை,



நஞ்சன்கூடு பல்பொடி

நஞ்சன்கூடு.

சோல் ஏஜண்டுகள்:-யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்.

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்



டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்ளுக்கு ரூ. (2-0-0) பிரான்சு:

டிப்போ, பம்பாய்
கல்கத்தா

மதுரை
காஞ்சீபுரம்.

ஸ்ரீமத் உ. வே. பெருமாள்கோவில் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்காராசாரியர் ஸ்வாமி அருளிய உரைப் புத்தகங்கள்.

முதலாயிரம்.

3-வால்யூம்களாக காலிகோபயிண்டு விலை	ரூ.	10	0	0
முதலாயிரம் 6-வால்யூம்: திருப்பல்லாண்டு பெரியாழ்வார் திருமொழி	,,	3	0	0
திருப்பாவை	,,	1	4	0
நாச்சியார் திருமொழி	,,	1	12	0
பெருமாள் திருமொழி	,,	1	8	0
திருச்சந்த விருத்தம்	,,	1	8	0
திருமாலை, திருப்பள்ளியெழுச்சி அமலனுதிபிரான், கண்ணி நுண் சிறுத்தாம்பு	,,	1	4	0

2-வது ஆயிரம்

பெரிய திருமொழி (1, 2 பத்துக்கள்)	ரூ.	3	0	
,, (3, 4, 5 ,,)	,,	3	8	0
,, (6, 7, 8 ,,)	,,	3	8	0

3-வது ஆயிரம் (இயற்பா)

பெரிய திருமொழி (9, 10, 11 பத்துக்கள்) அச்சில்.				
முதல் வால்யூம் (1,2,3,4 திருவந்தாதிகள்	ரூ.	4	8	0
2-வது (திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி)	,,	4	0	0
3-வது (திருவெழுக்கூற்றிருக்கை திருமடல்கள், இராமாநுச நூற்றந்தாதி)	,,	3	0	0
இராமாநுச நூற்றந்தாதி	,,	1	0	0
ஸ்ரீ ஆளவந்தார் ஸ்தோத்ரம்	,,	1	0	0
ஸ்ரீவசந பூஷண ஸாரம்	,,	1	4	0
கூரத்தாழ்வான் வைபவம்	,,	0	4	0
ஸ்ரீ முகுந்த மாலை	,,	0	6	0

திவ்ய ப்ரபந்த திவ்யார்த்த தீபிகை ஆபீஸ்,
32, பந்தர் தெரு, மதராஸ்.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

1. குலசேகர ஆழ்வார் அருளிய பெருமாள் திருமொழி:—மூலமும், பு. பா. இரத்தினசபாபதி நாய்க்கர் எழுதிய பதவுரை, விசேடவுரை, சரித்திரக் குறிப்பு, இலக்கணக் குறிப்புடன் கூடியது. விலை மார்பில் ரூ. 1-0-0; காலிகோ ரூ. 1-4-0.

2. அகத்திய முனிவர் அருளிய ஆறெழுத்து அந்தாதி:—முருகக் கடவுளை உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளார் என்று கருதலாகும் நூறு செய்யுள் கொண்டது. டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளையின் உரையுடன் விலை அணா 12.

3. கம்பராமாயணம்.பாலகாண்டம்:—T.N. சேஷாசலம் ஐயர் பதிப்பு. கவியின் சொற்கொண்டே பாட்டின் பொருளைத் தெரியும் வண்ணம் உரைவரையப்பட்டுளது. அரும்பதவுரையும் விசேஷக் குறிப்புகளும், சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 2-8-0.

4. ஏமாங்கதத்திளவரசன்:—ஸ்ரீமான் T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது. இலக்கிய நயம் துலங்குமோர் காதற் கதை. விலை ரூ. 1-0-0.

5. முருகன்—ஓர் உழவன்:—ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A. B.L. ஆங்கிலத்தில் வரைந்த நாவல் நூல். ஸ்ரீமதி கிருஷ்ண குமாரி தமிழில் மொழி பெயர்த்துள்ளார். விலை ரூ. 1-8-0.

6. திருக்குறள்:—மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு. திருக்குறளை ஆராய விரும்புவோருக்கு மிகவும் உபயோகமானது. விலை அணா 12.

கலா நிலயம் ஆபீஸ், புரசைவாக்கம், சென்னை.

:: பிரபல ஜோதிஷர் ::

மஹாராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றவர்.

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ- 5. ஒரு வருஷ பலன் எழு ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம்தேவை) (ஜ்யோதிட ஞானபோதினி விலை அணா 8. பண்டித காழியூர்,

ம. ஸ்ரீநிவாஸாசாரியார்,
218 தங்கசாலை வீதி, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)